93

1-10-54

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை

OFFICE ... RAR OF BOOKS
8-OCT 1954
MADRAS

கேட்டீர்களா!

ஓராசிரியர் பள்ளிகள்

வட ஆற்காடு ஜில்லாவில் இந்த வருஷம் 114 ஓராசிரியர்கள் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன. இது வரையில் பள்ளிக்கூடங்களே இல்லாத சிறு கிராமங்களில் ஒரே ஆசிரியரைக் கொண்டு நடத்தும் பள்ளிக்கூடங்கள் எல்லா ஜில்லாக்களிலும் ஆரம்பிக்க சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்கள்.

காந்தி மண்டப நிதி

சென்னையில் காந்தி நினைவு மண்டபம் கட்டப் போகிறார்கள். இந்த நிதிக்குக் குழந்தைகள் கூடத் தங்களால் இயன்ற அளவு உதவியைச் செய்யலாம். நன்கொடை அனுப்ப விரும்பும் குழந்தைகள், கண்ணன் காரியாலயத்துக்குப் பணம் அனுப்பலாம். அவர்கள் பெயரைக் கண்ணனில் வெளியிடுவோம். ஒரு ரூபாயும், அதற்கு மேலும் அனுப்பும் தொகைக்கு கவர்னரிடமிருந்தே அவர் கையெழுத்திட்ட ரசீது கிடைக்கும்.

சர்வதேசக் குழந்தைகள் கலைக் காட்சி

எழும்பூர் சர்க்கார் மியூஸியத்தில் குழந்தைகள் கலைக் காட்சி ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. உலகின் 44 நாடுகளைச் சேர்ந்த குழந்தைகள் தீட்டிய படங்கள் இதில் இடம் பெற்றுள்ளன. இரண்டரை வயதிலிருந்து பதினாறு வயது வரையுள்ள குழந்தைகள் தீட்டிய 1500 சித்திரங்கள் இருக்கின்றன. இவற்றில் 200 படங்கள் பரிசு பெற்றவை. இந்தக் கலைக் காட்சி முன்பே இந்தியாவின் பல இடங்களில் வைக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் நடந்த இந்தக் காட்சியை, கல்வி மந்திரி தொடங்கி வைத்தார். சர்வ கலாசாலை உப அத்தியட்சகர் தலைமை வகித்தார்.

குழந்தைகளைக் கொல்லும் தோடர்கள்

தோடர்கள் பழங்குடி மக்கள் நீலகிரி மலைப் பிரதேசத்தில் வாழும் மலைஜாதியினர். நீலகிரி பள்ளத்தாக்கு முழுவதிலும் ஒரு காலத்தில் இவர்களே வாழ்ந்தனர். இப்பொழுது இவர்களின் எண்ணிகை 475-க்கு வந்துவிட்டது. பிறக்கும் குழந்தைகளை இவர்கள் கொன்று விடுவது வழக்கமாம். சில சமூக ஊழியர்களுடைய முயற்சியாலும் சமூக க்ஷேமாபிவிருத்தி ஊழியர்களுடைய ஒத்துழைப்பாலும் இவர்களுடைய இந்த வழக்கம் இப்போது நிறுத்தப்பட்டுள்ளது.

செந்தமிழ்ச் செல்வர்

கருமபுர ஆதீனத்தார் ஆவணி மூல விழாவின்போது கலைமகள் ஆசிரியர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்களுக்கு 'செந்தமிழ்ச் செல்வர்' என்ற பட்டத்தை வழங்கினார். பொன்னாடையும் தங்கப் பதக்கமும் அவருக்கு வழங்கப்பட்டன.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 5 இதழ்: 19

1 - 10 - '54

குழந்தைகளே!	பக்கம்	2
லீடர் மணி	..	3
பெருந்தன்மை	..	9
நேர்மை உள்ளம்	..	13
பூனை எங்கே?	..	18
தாதியின் வெற்றி	..	21
கேளுங்கள், சொல்கிறேன்!	..	26
ஆடிய படம்	..	29
தூங்கும் அழகி	..	33
சந்திரகிரிக்கோட்டை	..	34
எங்கள் பகுதி	..	39
கேட்டீர்களா! - 2-ஆவது அட்டை		
கிளைக் கழகம் - 3-ஆவது அட்டை		

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

அருமையான சம்பவம்

மதுரை பஸ் ஸ்டாண்டில் ஒரே கூட்டம். கிடைசிப் பஸ்ஸில் கஷ்டப்பட்டு நானும் என் அண்ணனும் தொத்தி ஏறினோம். பஸ் புறப்படும் சமயம்.

வயதான பெரியவர் ஒருவரும் ஓர் அம்மாளும் எங்கள் பஸ்ஸை நோக்கி வந்தார்கள். கண்டக்டரிடம், தன் தம்பி ஸ்ரீவில்லிபுத்தூரில் இறந்து விட்டதாயும் அதனால் கட்டாயம் இரண்டு டிக்கட் வேண்டுமெனவும் கேட்டார். கண்டக்டர் மனம் இரங்கி எங்கள் இருவரையும் கீழே இறங்கச் சொன்னான். அதற்கு என் அண்ணன் மறுத்தான். ஏனெனில் மறுநாள் ஸ்ரீவில்லிபுத்தூரில் எங்கள் பள்ளிகூடம் விடுமுறைக்குப் பின் திறக்கின்ற நாள். அப்போது பெரியவர் என் அண்ணனிடம் வந்து கெஞ்சினார். அண்ணன் சம்மதிக்கவே இறங்கினோம். அவர்கள் அந்தப் பஸ்ஸில் ஏறிச் சென்றார்கள்.

மறுநாள் காலை முதல் பஸ்ஸில் நானும் அண்ணனும் காரின் முன் 'ஸீட்டில்' உட்கார்ந்து கொண்டு சென்றோம். பஸ் கல்லுப்பட்டியைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தது. அப்போது ரஸ்தாவுக்கு அருகில் ஒரு பஸ் கவிழ்ந்து கிடந்தது. நேற்று இரவு வந்த கடைசி பஸ்ஸே அது! இறங்கிப் பார்த்தோம். சிலர் இறந்து விட்டனர்! பலர் படுகாயமுற்றுக் கிடந்தனர். எங்களால் உதவி செய்யப்பட்ட அந்தத் தம்பதி அங்கே பிணமாகிக் கிடந்தார்கள்! நாங்கள் போயிருந்தால்...

ஆர். சுந்தரராஜன், அழகர்கோவில்.

குழந்தைகளே!

இந்த இதழுக்கு அடுத்தபடியாக வரப்போகும் இதழ் தீபாவளி மலர்தான்! அதாவது 15-10-54 இதழ் என்று தனியாகக் கிடையாது. அன்று வர வேண்டிய இதழ்தான் தீபாவளி மலராக வருகிறது. தீபாவளிக்கு முதல்நாளே இலங்கையிலிருந்து இமயம் வரையிலுள்ள தமிழ்க் குழந்தைகளுக்கும், தமிழ் தெரிந்த குழந்தைகளுக்கும் கண்ணன் மலர் கிடைத்துவிடும்.

கண்ணன் தீபாவளி மலரைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அட்டைப்படம் வழக்கம்போல் இருக்காது. தகதக வென்ற இந்த மூவர்ண அட்டைப்படத்தை ஒரு பிரபல ஓவியர் தீட்டியிருக்கிறார். இன்றைக்கெல்லாம் அந்தப் படத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். வேறு சில பிரமுகர்களும் மலரைச் சிறப்பிக்கிறார்கள். கண்ணன் மலரில் இந்த வருஷம் புகைப்படப் பகுதிகளுக்கு முதல் ஸ்தானம் கொடுத்து விடலாம். அத்தனை புதுப் புதும் படங்கள், சுவாரஸ்யமான படங்கள் வெளிவருகின்றன. வெட்டி ஒட்டும் மூவர்ணப் படமும், வேடிக்கை காட்டும் பாம்பும் பிடாரனும் 'ஸ்பெஷல்' அம்சங்கள். இதையெல்லாம் சாதாரணமாகச் சொல்லி விட்டேன். சொல்லக் கூடாத பகுதிகளும் மலரில் வெளிவருகின்றன. இப்போதே எல்லாவற்றையும் அவிழ்த்து விட்டுவிட்டால் அப்புறம் சுவாரஸ்யம் என்ன இருக்கும்? உங்களைப் பிரமிக்க வைக்க வேண்டுமே!

உங்கள் அபிமான எழுத்தாளர்களில் முக்கியமான சிலர் இந்த மலருக்கு அருமையான கதைகளும் கவிதைகளும் துணுக்குகளும் எழுதுகிறார்கள். உங்களைப் போன்ற சிறுவர் சிறுமியர் பலரும் தங்கள் கை வன்மையைக் காட்டி இந்த மலரில் இடம் பெறுகிறார்கள். மொத்தத்தில் உங்களுக்குப் பிடிக்கக் கூடிய எல்லா அம்சங்களும் மலரில் வெளிவருகின்றன. எத்தனை எத்தனை படங்கள்! எத்தனை எத்தனை பகுதிகள்! எல்லாம், 'பிரமாதம், பிரமாதம்! என்று கொண்டாடுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

மலர் ஜோராகத்தான் இருக்கும்; சரி, ஆனால் உங்களுக்கு மலர் சரியான சமயத்தில் கிடைக்கவேண்டுமே! இப்போதே உங்கள் ஊரில் உள்ள கலைமகள் - கண்ணன் ஏஜெண்டிடம் உங்களுக்குக் கண்ணன் மலர் வேண்டும் என்று பெயரைக் கொடுத்துப் பதிவு செய்துகொண்டு விடுங்கள். பதிவு செய்துகொண்டு விட்டால் கட்டாயம் மலர் கிடைத்துவிடும். உங்கள் ஊர் ஏஜெண்டு இல்லாத இடமாக இருந்தால் தபாலில் ஒரு ரூபாயை மணியார்டர் செய்து விடுங்கள். 'டாண்' என்று தபாலில் மலர் உங்களைத் தேடி வந்துவிடும். ரிஜிஸ்டர் மூலம் மலர் வேண்டும் குழந்தைகள் ரூ. 1-6-0 மணியார்டர் செய்யவேண்டும். இவ்வளவையும் உடனே செய்யவேண்டும். அப்புறம் கடைசியாகப் போனால் உங்கள் ஏஜெண்டு, "மலர் கிடையாது" என்று சொல்லிவிடுவார்.

வழக்கம் போல் மலரில் தொடர்கதைகள் வெளியாகின்றன. மலருக்கு அடுத்த நவம்பர் முதல் தேதி வெளிவரும் கண்ணன் இதழும் உண்டு. ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். ஜய்ஹிந்த்!

—ஆசிரியர்.

லீடர் மணி

'ஆர்வி'

உள்ளே அத்தையோடு பேசிய குரல் சமீபத்தில் கேட்ட குரல்போலிருந்தது. பேசிய விஷயங்களும் அவன் பயப்படும்படியானதாக இல்லை.

ஆற்றங்கரையில் காப்பாற்றிய பெண்ணின் தாய்தான் வந்திருந்தாள். சும்மா நன்றி கூறிவிட்டுப் போக மட்டும் வரவில்லை; கை நிறையப் பரிசுகளும் பாக்கெட்டுகளுமாகக் கொண்டு வந்திருந்தாள். அவள் அந்த ஊர் சப் மாஜிஸ்ரேட்டின் மனைவி என்பது தெரிந்ததும், அத்தையின் உபசாரம் கொஞ்சம் அதிகப்படியாகவே இருந்தது.

மணி அத்தையிடம் மத்தியானம் நடந்த அந்தச் சம்பவத்தைப் பற்றி ஒன்றும் கூறவேயில்லை. சொன்னால் ஆற்றில் துளைந்ததற்காக அத்தை கோபித்தாலும் கோபித்துக் கொள்ளலாம் என்று பேசாமல் இருந்துவிட்டான். ஓர் உயிரைக் காப்பாற்றியதற்காக அத்தை பாராட்ட வேண்டியது போக, பயந்து போய் இனி ஆற்றங்கரைக்கே போகக்கூடாது என்று தடையுத்தரவு போட்டுவிட்டால் என்ன செய்வது? இதையெல்லாம் எண்ணித்தான் மணி சும்மா இருந்துவிட்டான்.

இப்பொழுது அந்தச் சம்பவம் மிக முக்கியமானதாகப் போய் விட்டது. அவன் ஒரு சப் மாஜிஸ்டிரேட்டின் பெண்ணைக் காப்பாற்றி யிருக்கிறான். அந்த அம்மாள், தங்களுடைய நன்றி விசுவாசத்தைக் காண்பிக்க வந்திருக்கிறாள். அது வரையிலும் அத்தைக்கு விஷயமே தெரியாமல் இருந்திருக்கிறது. அதனால் ஒரு தர்ம சங்கடமான நிலையில் அவள் பேச வேண்டியிருந்தது. தனக்கு எதுவுமே தெரியாது என்று வெளிப்படையாகவும் சொல்லிக் கொள்ள அத்தை சங்கடப்பட்டாள். 'எண்டாப்பா, இதை முன்பே அத்தையிடம் சொல்லாமல் போனோம்?' என்று மணி மனசுக்குள் வருந்தினான். அத்தை வந்த அம்மாளிடம் மேலுக்குப் பெருமையாகப் பேசியபோதிலும்

தன்மீது அவளுக்குச் சரியான கோபமும் வருத்தமும் இருக்கும் என்று மணிக்குத் தோன்றியது.

'சரி, இப்போது உள்ளே போய் மாட்டிக்கொள்ள வேண்டாம். அந்த அம்மாள் போன பிறகு வரலாம்' என்று வந்த சோடு தெரியாமல் திரும்பி, குமார் வீட்டை நோக்கிச் சென்றான்.

குமாரிடம் அன்று நடந்த விஷ

யங்களை யெல்லாம் ஒன்று விடாமல் சொல்லிவிட்டு அவனுடைய



யோசனையையும் கேட்டான்.

"நீ போடா சும்மா. கேட்டால், 'பயமாயிருந்தது, சொல்லவில்லை!' என்று சொல்லிவிடு. அப்படிக் கூடச் சொல்லவேண்டாம். 'மறந்து போயிட்டேன்; இல்லாவிட்டால் சொல்லியிருப்பேன்' என்று சொல்லிவிடேன். இதற்கெல்லாம் பயந்து சாகிறுயே!" என்று சொன்னுன் குமார்.

பார்க்கப்போனல் மணி ஆற்றங்கரைச் சம்பவத்துக்குக்கூடப் பயப்படவில்லை. அவனுக்கும் ராமுவுக்கும் சாயங்காலம் புட்பால் மைதானத்தில் நடந்த வாய்ச் சண்டையை எண்ணித்தான் கலங்கினுன். இது சிறு பையன்கள் சமாசாரம் என்று பிசுபிசுத்துப் போய்விடாமல் பெரிதாக முற்றிப் போனாலும் போகலாம்; அப்பாவுக்கு இந்தச் செய்தி எட்டி, விபரீதமாகப் போனாலும் போகலாம். அந்த வீட்டிலேயே இனி இருக்க முடியாமல் போனாலும் போகலாம். பிறகு சித்தி...சித்தியின் கொடுமையான தாக்குதல்! மணி கலங்கிய உள்ளத்துடன் நன்ருக இருட்டி, ஏழு மணி ஆன சமயத்தில் வீட்டையடைந்தான்.

வீட்டின் முன் கூடம், தாழ்வாரம் எங்கும் நிசப்தமாக இருந்தது. ஆனல் சமையல் கட்டில் வெளிச்சம் தெரிந்தது. சற்றைக்கெல்லாம் பாத்திரங்களின் ஓசை கேட்டது. தூங்கிப் போவதற்குள் வழக்கப்படி முன்னல் கமலா சாப்பிடுகிருள் என்பது தெரிந்தது. ராமுவும் அங்கே இருக்கிருன் என்பதும் தெரிந்தது.

"அந்த ஜாடியில் இருக்கும் ஊறுகாயை எடுத்துக் குழந்தைக்குப் போடேன்" என்று அத்தை அவனிடம் சொன்னதுகூட மணியின் காதில் விழுந்தது.

'சரிதான், ராமு அத்தையிடம் சாயங்காலம் நடந்ததையெல்லாம் ஒன்று விடாமல் சொல்லியிருப்பான். ஒன்று விடாமல் சொல்லியிருந்தால் கூடப் பரவாயில்லையே

எல்லாம் விபரீதமாகப் படும்படி சொல்லியிருப்பான். நான் என்ன சமாதானம் சொன்னாலும் அத்தையின் காதில் ஏறாது' என்று மணி எண்ணிக்கொண்டான்.

தாழ்வாரத்து மேஜைமீது ஹரிக்கேன் விளக்கு சின்னதாக எரிந்துகொண் டிருந்தது. அதைச் சற்றுப் பெரிதாக்கி எடுத்துக் கொண்டு தன் பெட்டியடிக்குப் போனான். ரொம்ப நல்ல பையன் மாதிரி வந்தது, உட்கார்ந்தது தெரியாதபடி, ஒரு புஸ்தகத்தை வைத்துக் கொண்டு படிக்கலானான். தன் நினைவு இருந்தால் அல்லவா அது என்ன புஸ்தகம் என்பது அவனுக்குத் தெரியும்! ஏதோ மேலே கிடந்த புஸ்தகம், ஏதோ கை பிரித்த பக்கம்!

சற்றைக்கெல்லாம் ராமு வெளியில் வந்தான். கூடம் வரையில் வந்தவன் மணி உட்கார்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு, உள்ளே மறுபடியும் திரும்பிச் சென்றான்.

"அம்மா, மணி வந்து உட்கார்ந்திருக்கான், அம்மா."

"எப்போ வந்தானும்?" என்று தலைப்பைக் கையால் துடைத்துக் கொண்டே அத்தை வெளியில் வருவது தெரிந்தது.

மணிக்குப் புயல் வருவது போலவே இருந்தது. அந்தப் புயல் பயங்கரமாக வீசி அடிக்கப் போவதுபோலவே இருந்தது. அந்தப் புயலில் சிக்கிக் கொண்டு அவன் எங்கேயோ போய் உருண்டு விழப்போவதுபோல் இருந்தது. தலை சுற்றியது. கண்கள் சுற்றிச் சுழன்றன. அப்படித்தான் ஆகட்டும்; அவன் என்ன செய்யக் கூடாத பெரிய குற்றத்தைச் செய்து விட்டான்! அவனுக்கு என்னவோ தான் செய்திருப்பது எல்லாம் மலை போன்ற குற்றமாகவே பட்டது.

அத்தை ஊஞ்சற் பலகையில் வந்து உட்கார்ந்து கொண்டாள். "டேய் மணி! இங்கே வா, கொஞ்சம்" என்று கூப்பிட்டாள்.

தாழ்வாரம் இருளாக இருந்தால் மணி விளக்கைத் தூக்கிக் கொண்டு வந்தான்.

"இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா என்பதுபோல வருான், பாரேன்" என்றாள் அத்தை. ராமுவோ தன் அப்பாவின் காமரா அறைக்குள் சென்றான். அவனுடைய மேஜை நாற்காலிகளை அவன் அங்கேதான் போட்டிருந்தான். புத்தகங்களும் அங்கேதான் இருந்தன. அவன் தானே வீட்டுக்கு உண்மையில் எஜமான்; சின்ன எஜமான்! அந்தத் தோரணை நன்றாக விளங்கியது; எல்லாருக்குமே விளங்கியது; ஒவ்வொன்றிலும் விளங்கியது.

"ஏண்டா, ஒழுங்கா இருக்க மாட்டே போலிருக்கே நீ?" என்றாள் அத்தை, மணியைப் பார்த்து.

மணி அத்தையை ஏறிட்டுப் பார்த்தான். அப்போது எதிரேயிருந்த அலமாரியில், சாயங்காலம் அவனுக்கு என்று வந்திருந்த பரிசுப் பாக்கெட்டுகள் வைத்திருப்பது தெரிந்தது. பெரிய பெரிய பொட்டலங்கள் இரண்டு! 'என்னவாக இருக்கும்?' என்று மணி எண்ணினான்.

அவன் கவனிப்பதை அத்தையும் பார்த்துவிட்டு, "பெண்ணைக் காப்பாத்தறேன்னு, நீயும் ஆத்தோடே போயிட்டா, உங்க அப்பாவுக்கு யாருடா பதில்

சொல்வது? பெரிய மழுங்குணி மாங்கொட்டையாக இருக்கிருயே!'' என்ருள்.

மணி ஒன்றும் சொல்லாமல் தலையைக் குனிந்துகொண்டு குற்றவாளி போல நின்ருன்.

''நீ வாயை மூடிண்டு இருந்துட்டா எனக்குத் தெரியாமே போயிடுமா? எங்கிட்டே நடந்ததைச் சொல்றதுக்கு என்னடா, உனக்கு? அமுக்கமா அடைச்ச புளிமாதிரி இருந்திருக்கியே, நெஞ்சழுத்தம்தானே உனக்கு?'' என்ருள் அத்தை.

மணி ஏதோ பதில் சொல்ல நினைத்தான். குமார் சொல்லிக் கொடுத்த வார்த்தைகள் ஒன்றும் சமாதானமாகப் படவில்லை. மறந்து விட்டதாகச் சொல்வது சரியல்ல; பயமாக இருந்தது என்று சொல்வதும் பொருத்தமல்ல. பதில் பேசாமல் இருப்பது போல் உள்ள சுகம் ஒன்றிலும் இல்லை என்று மணி சும்மா நின்ருன்.

அத்தைக்கு அவன் பதில் சொல்லாமல் நின்றது இன்னும் கோபத்தை மூட்டியது. ''அது தான் போகட்டும் என்ருல், ராமுவைப் பார்த்துப் பேய், பிசாசு என்றெல்லாம் சொல்கிருயாமே! அவன் என்ன உன் திட்டமா? உன் வம்புக்கு வருனு? அவனேடு உனக்கு என்ன பேச்சு? அப்படியே பேசறது என்ருலும் இன்னதுதான் பேசறதுன்னு கிடையாதா?' நீ யாரடா சொல்ல, உன் வீடாடா அது?' இப்படியாடா அவனைப் பார்த்துக் கேட்கறது? அவன் என்ன உனக்குச் சொந்தமில்லையா? வேற்று மனுஷனு? நாலு பேரை வச்சிண்டு அவனை மானம் போகப் பேசினுயாமே? 'தாயில்லாப் பிள்ளை, நாம் ஒன்றும் சொல்லக்கூடாது' என்று பார்த்தால் இதெல்லாம் சரியாக இல்லையே'' என்ருள்.

மணி பதில் சொல்ல நினைத்தவன் விக்கித்துப் போனன். தான் சொன்ன வார்த்தைகளையெல்லாம் வைத்துத் திரித்துத் தனக்கு விரோதமாகப் படும்படி அத்தையிடம் ராமு எவ்வளவு அழகாக, ஆனல் பயங்கரமாக ஜோடித்திருக்கிருன்! இந்த அபாண்டமான கட்டுக் கதையை அத்தை அப்படியே நம்பி விட்டாளே! என்ன, ஏது என்று மெல்லக் கேட்டிருந்தால் அவன் நடந்ததை நடந்தபடியே சொல்லியிருப்பானே! இப்பொழுது அவன் எதைச் சொன்னலும் அத்தையின் அபிப்பிராயம் மாறப் போகிறதா?

இதற்குள் ராமு உள்ளே காச் மூச்சென்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தான்.

''அடீ கமலா? எங்கேடி வச்சே?'' என்று அவளை அழைத்து விரட்டிக்கொண்டிருந்தாள்.

''நான் பார்க்கவேயில்லை, அண்ணு! எனக்குத் தெரியவே தெரியாதே?'' என்ருள் கமலா.

''அப்படியானு, இங்கே டேபிள் மேலே வச்சிருந்தது எங்கே போய் விடுமாம்?''

''என்னைக் கேட்டால் எனக்கு என்ன தெரியுமாம்!'' என்று சொல்லிக் கொண்டே கமலா ஊஞ்சல் பலகைக்கு அருகில் ஓடி வந்து விட்டாள். ராமு அவளைத் துரத்திக் கொண்டு அங்கே வந்தான்.

''இந்த வீட்டிலே நான் என்ன இருக்கிறதா, போயிடறதா?

எதை வச்சாலும் வச்ச இடத்திலே இருக்கிறதில்லையே! நானும் இனிமே யார் வீட்டுக்கானும் போயிருந்து படிக்க வேண்டியது தான். இங்கே இருக்க எனக்கு லாயக்கே இல்லே—" என்று ராமு பெரிதாகச் சப்தம் போட்டுக் கத்தினான்.

மணிக்கு அந்த வார்த்தைகளின் பிற்பகுதி சுருக்கென்று தைத்தன. அத்தை உடனே, "என்னடா ராமு! என்ன கூச்சல் இது?" என்று கேட்டாள்.

"என் டேபிள் மேலே, 'செய்து பாருங்கள்' என்ற வர்ணப் படப் புத்தகம் வாங்கி வைத்திருந்தேன். லைப்ரரி புஸ்தகம். அதைக் காணல்லே!" என்றான் ராமு.

"எங்கேடா போயிடும்? நன்றாய்த் தேடிப் பாரேன்!"

"எங்கேம்மா போய்த் தேடச் சொல்றே? வச்சது வச்ச இடத்திலே இருக்க வேண்டியதை, வங்கு வளையெல்லாம் போய்த் தேடச் சொல்றியா?"

"நான் ஒண்ணும் உன்னைக் கண்ட இடத்திலே போய்த் தேடச் சொல்லல்லே, மேஜை, அலமாரி எங்கேயும் நன்னாப் பார்க்கச் சொல்றேன். ஏண்டி, கமலா! பாத்து, எடுத்துக் கொடேண்டி! முழிக்கிறியே!" என்று கூறினாள் அத்தை.

ராமு மணியை வெட்டிவிடுபவன் போல் பார்த்துக்கொண்டே போனான்.

"போடா போ, ஒழுங்கா இருந்தா இரு, சண்டை கிண்டை போடறதன்னா உங்க அப்பாவை வரவழைச்சு உன்னை ஊருக்கு அனுப்பிச்சுடுவேன். நன்னா வாயிலே வந்தபடியெல்லாம் பேசினே, உன்னை விடப் பெரியவனைப் போய்!" என்றாள் அத்தை.

"நான் அப்படியெல்லாம் பேசவே இல்லே, அத்தே! அவன் தான் என்னை ஆடப்படாதுன்னு சொன்னான்!"

"சொன்னா என்னடா? சொல்லிட்டாக் குறைஞ்சி போயிடுவயோ? சரிதான்னு போகிறது தானே?"

இதற்கு என்ன பதில் சொல்வது? அத்தைக்கு எல்லாம் வெகு சுலபமாக இருந்தது.

"இதோ பாத்தியா அம்மா! பாத்தியா, இந்த அக்கிரமத்தை! நன்னாப் பாரு. மோட்டார் படம் வேறே, புத்தகம் வேறேயா வெட்டிக் குட்டிச் சுவரு பண்ணி வச்சிருக்கிறதைப் பாரு! இந்த அக்கிரமம் எங்கேயாவது நடக்குமா? இரவல் வாங்கின புத்தகத்தை, அஞ்சு ரூபா புஸ்தகம் இது-தெரியுமா, பார்!" என்று ஆவேசம் வந்தவன் போலக் கத்திக் கொண்டே வந்தான் ராமு. கைகளில் புத்தகம் வேறு, படம் வேறாக இருந்தன.

"யாரு பண்ணினா இப்படி? எங்கே இருந்தது இப்போ?"

"கேளு நன்னா! அப்படிக் கேளு! எல்லாம் உன் மருமானையே கேளு. அவன் பெட்டி மேலேருந்துதான் இப்போ கொண்டு வரேன்!"

மணிக்கு மார்பில் யாரோ கத்தியைப் பாய்ச்சியது போலிருந்தது.

"என் பெட்டி மேலேயா.. ஐயையோ..என் பெட்டி மேலேயா..?" என்று குழறினான்.

(தொடரும்)

பெருந்தன்மை

எஸ். சுவாமிநாதன்

“ஜானகிராமன்!”

“பிரெஸண்ட் ஸார்!”

“..ஜயராமன்!”

“..பிரெஸ..ண்ட்..ஸார்!”

வாத்தியார் சுந்தரம் கண்ணை எடுத்து ஜயராமனை நோக்கினார். வழக்கமான பாணியில், “எங்கே, துரையை ரெண்டு நாளாக் காணோம்?” என்றார்.

வாத்தியார் கை மேஜையில் எதையோ தேடியது. பிரம்பை யல்ல; ‘கன்பவுடர்’ பொடிடப்பியைத்தான்.

“என்னடா சனியனே, வாயிலெ என்ன மாவிளக்கா?”

“இல்லே, ஸார்! வந்து..”

“சட்டுனு சொல்லேண்டா. அஸத்து....”

“எங்க அம்மாவுக்கு முடியல்லே, ஸார்.”

“ஓகோ..அதுதானே பார்த்தேன்; இத்தனை நாழி யோசித்தானென்னு. பலே, பலே. இன்னிக்கு அம்மாக்கு முடியல்லே.. நாளைக்கு பாட்டி, அப்புறம்?”

உடனே ஏதோ பெரிய ஹாஸ்யத்தை அள்ளிப் பருகினமாதிரி முழு வகுப்பும் கொல்லெனச் சிரித்துவிட்டது.

“ஸைலன்ஸ்..” - இது வாத்தியாரின் குரல். திடீரென அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் பெண் சாவித்திரி எழுந்து, “ஒரு

2

வேலை ஜயராமன் அம்மாவுக்கு நிஜ மாகவே முடியாமல் இருக்கலாம், ஸார். வீணு ஏன் ஸார், அவனைக் கிண்டல் செய்யணும்? பிறரைப் பழிப்பது தப்புன்னு சேத்திக்கு நீங்கதானே ஸார், சொன்னீங்க!" என்ருள்.

கிஷ்கிந்தாபுரி போன்ற அந்த வகுப்பில், மிகவும் நல்லவன் ஜயராமன் என்பது சாவித்திரியின் மாருத அபிப்பிராயம்.

தனக்குப் பரிவு காட்டும் ஓர் ஆத்மாகூட இந்த வகுப்பில், ஏன் இந்த உலகத்தில், உள்ளதை அன்றுதான் ஜயராமன் கண்டறிந் தான். நன்றி காட்டும் பாவனை யில் சாவித்திரியை நோக்கினுன்.

அன்றைத் தினம் பள்ளிக்கூடம் விட்டதும் ஜயராமன் சோர்ந்த முகத்துடன் தோளில் தொங்கும் புஸ்தகப் பையுடன் வந்தான்.

"ஜயராமா!"

ஜயராமன் திரும்பினுன்.

"ஜயராமா! வாத்தியார் சொன்னதிலே வருத்தமா? எனக்குத் தெரியும், நீ சொன்னது நிஜமின்னு" என்ருள் சாவித்திரி.

"......"

"ஏன் ஜயராமா, அழறே? உங்க அம்மாவுக்கு இப்போ தேவலையா, மருந்து குடிக்கிருளா?"

"இல்லே சாவித்திரி. எங்க அம்மா வேலை பார்த்திண்டிருந்த வீட்டுக்காரா எங்க அம்மாவை வேண்டாமுன்னுட்டா. அதனுலே, நாங்க ரெண்டு நாளாகச் சாப்பிடவே யில்லே. நான் மட்டும் காலம்பர கொஞ்சம் சாப்பிட்டேன். அம்மாவுக்கு அதுகூட இல்லே, பாவம்" என்ருன்.

"டாக்டர்கிட்டே காட்டுவதுதானே?"

"காலம்பற காட்டி மருந்து வாங்கினேன். டாக்டர், 'வெறும் மருந்து போருது; ஊசி போடணும்'னு சீட்டு எழுதிக் கொடுத்தார். அது வந்து எல்லாம் அஞ்சு ரூபா ஆகுமாம். எங்கிட்டே இப்போ அஞ்சு அணுகூடக் கிடையாது. என்ன செய்யறது?"

"உங்க அம்மா வேலை செஞ்ச இடத்துலே கேட்டுப் பாத்தியா?"

"அவா ரொம்பப்போல்லாதவா, சாவித்திரி! இன்னும் எங்கம்மா சம்பளத்தையே தரல்லே."

"சரி, ஜயராம்! நீ என்னோடே வா. எங்க வீட்டுலே இன்னிக்குச் சாப்பிடலாம்."

"வேண்டாம் சாவித்திரி."

"பரவாயில்லே, நீ வா. நான் பார்த்துக்கறேன்" என்று சாவித்திரி அவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனுள்.

பசி முன்னே உந்த, கௌரவம் பின்னே இழுக்க ஜயராமன் சாவித்திரியுடன் சென்ருன்.

வீட்டை யடைந்ததும், ஜயராமனைக் கூடத்துப் பெஞ்சியில் இருக்கச் சொல்லிவிட்டு, சாவித்திரி உள்ளே சென்ருள்.

"அம்மா!...."

"என், இத்தனை நாழி இன்னிக்கு? வரவர நீ ரொம்ப மோசமா இருக்கியே. சரி, சரி, போய் உப்புமா வைச்சிருக்கேன்; தின்னுட்டு, வா!" என்று சாவித்திரியின் தாய் சாரதாம்பாளின் குரல் கேட்டது.

"அம்மா...."

"என்னடி அம்மாவுக்கு?"

"ஒண்ணுமில்லேம்மா, எங்க கிளாஸ் பையன், ஜயராமன் இருக்கான், பாரு; அவ அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம்மா."

"இதை எதுக்கு எங்கிட்டே சொல்றே, நான் என்ன டாக்டரா?"

"இல்லேம்மா, அவாளெல்லாம் ரெண்டு நாளாப்பட்டினியாம்மா."

"நான் கூடத்தான் இன்னிக்கு ஏகாதசிப் பட்டினி."

"கேலி பண்ணாதேம்மா. அவ அம்மாவுக்கு வேலையில்லையம்மா. அதனாலே பணமில்லாமெ ரெண்டு பேரும் பட்டினி கிடக்காளாம்; ஜயராமனைக் கூட்டிண்டு வந்திருக்கேம்மா."

"கன்னாத்தாண்டி இருக்கு. பேசாமே வேலையைப் பாருடி!"

"அப்படில்லாம் சொல்லாதேம்மா, அவன் காதிலே பட்டாக்கா எப்படியிருக்கும்?"

சாவித்திரிக்கு முகம் சுண்டிவிட்டது. கையில் இருந்த உப்புமாத் தட்டுடன் கூடத்திற்கு வந்தாள். ஆனால் அங்கே அவள் கண்டது, காலி பெஞ்சுதான். அவன் போய் விட்டான். தன்னுடைய அம்மா வித்தியாசமாக இருந்ததால்தான் போய்விட்டானே என்று அவளுடைய மனம் வேதனையுண்டது. உப்புமாவை வைத்துவிட்டு வெளியே ஓடினாள்.

சிறிது தூரத்தில் ஜயராமன் போய்க்கொண்டிருந்தான்.

"ஜயரா..ம்!"

திரும்பினான். கலங்கிய அவன் கண்கள் அம்பெனப் பாய்ந்தது சிறுமி சாவித்திரியின் உள்ளத்தில்.

"கோபமா, ஜயராம்? அம்மா எப்போதுமே அப்படித்தான்."

"இல்லே, சாவித்திரி! உங்கம்மா உள்ளதைத்தானே சொன்னாள்? நான் ஏன் கோபப்படணும்?"

"இந்தா ஜயராம், இதை வச்சுக்கோ, உங்க அம்மாவுக்கு மருந்து வாங்க."

அந்தச் சிறுமியின் கையில் ஒரு ஐந்து ரூபாய் நோட்டு!

"ஐயையோ.. இது உனக்கு ஏது சாவித்திரி? வேண்டாம்.."

"காலம்பற சயன்ஸ் புஸ்தகம் வாங்கக் கொண்டு வந்தேன். புஸ்தகம் நாளைக்குத்தான் வருமாம். அதனாலே நீ இதை வைச்சுக்கோ. அப்புறம் வாங்கிக்கலாம்."

"வேண்டாம் சாவித்திரி, அதெல்லாம் தப்பு. அப்புறம் மட்டும் எப்படி வாங்குவே?"

"அதெல்லாம் எனக்குத் தெரியும்" என்று, டபக்கென்று அவனுடைய சட்டைப் பையில் ரூபாய் நோட்டைப் போட்டுவிட்டு அந்தச் சிறுமி பறந்துவிட்டாள். அவளைத்

தரத்திக்கொண்டு ஓட ஜயராமன் விரும்பவில்லை. பேசாமல் வீட்டை நோக்கி நடந்தான்.

மறுநாள் காலையில் சாவித்திரி தன் தாயிடம் சென்றாள்.

"அம்மா..."

"என்னடி, கண்ணு!"

"நேத்திக்கு ஸயன்ஸ் வாங்கப் பணம் கொடுத்தியே...."

"..ஆமாம் வாங்கிட்டயா?"

"இல்லேம்மா.."

"இல்லையா ...எங்கே, பணம்? பத்திரமா வச்சிருக்கயா?"

"இல்லேம்மா.."

"என்னடீது. எதுக்கெடுத்தாலும், இல்லேன்னுண்டு."

"ஆமாம்மா, ரூபா தொலைஞ்சு போயிடுத்து."

"அட ராமா..என்னடி இப்படி வெறும் மாடாயிருக்கே? அவருக்குத் தெரிஞ்சால் கொன்னுடுவாரே. என்ன செய்யறது, இப்போ? காசு ரெண்டா ஒண்ணு, சுளையா அஞ்சு ரூபா!" என்று அவள் அம்மா புலம்ப ஆரம்பித்துவிட்டாள்.

இந்தப் புலம்பலைக் கேட்டுக் கொண்டே அங்கே வந்தார், தந்தை ராமநாதன்.

"என்ன, காலம்பற எழுந்ததும் கூச்சல்?"

சாரதாம்பாள் எல்லாவற்றையும் கூறினாள். அதோடு, "நேத்திக்கு அந்த ஜயராமனோ, யாரோ ஒரு வாலு இவளோடேயே வீட்டுக்கு வந்தது. அது தான் ஒரு வேலை எடுத்திருக்கும்" என்றாள்.

சாவித்திரி உடனே, "அம்மா பாவம், அவனைக் கரிக்கறே? அவனுக்கு ஒன்றும் தெரியாது" என்றாள்.

ராமநாதன் மனைவியிடம், "நீ ஒரு மக்கு. அவகிட்டே என் ரூபாயைக் கொடுத்தே?" என்றான்.

"அடம் பிடிச்சு வாங்கிண்டா, நான் என்ன செய்யறது?"

"சரி சரி, பார்ப்போம்."

ராமநாதன் ஸ்கூலுக்குப் போகத் தயாரானார். அப்போது மெதுவாக உள்ளே நுழைந்தான், ஜயராமன். அவன் கையில் புத்தம் புதிய ஸயன்ஸ் புஸ்தகம்.

"என்னடா ஜயராமா..எங்கே வந்தே?" என்றார் ராமநாதன்.

"இது சாவித்திரிக்கு, ஸார்! நேத்திக்கு எங்கிட்டே வாங்கித் தரச் சொன்னாள். அப்புறம் மறந்து போய்விட்டாள்."

ராமநாதன் சாவித்திரியைக் கூப்பிட்டார். கூடவே சாரதாம்பாளும் வந்தாள்.

"ஏ சாவித்திரி! நேத்திக்கு ஜயராமன் கிட்டே புஸ்தகம் வாங்கப் பணம் கொடுத்தியாமே? இங்கே வந்து தொலைஞ்சு போயிடுத்துன்னு சொல்றியே!"

"ஆமாம்பா, நான் பணம் கொடுத்தது வாஸ்தவம்தான். ஆனால் அது புஸ்தகம் வாங்கறதுக்கு இல்லே. அவ அம்மாவுக்கு மருந்து வாங்கறதுக்கு."

அப்போதுதான் ராமநாதனுக்கும் சாரதாம்பாளுக்கும் விஷயம் புரிந்தது. நோயுற்ற தன் தாய்க்கு வைத்தியம் செய்ய நேர்மையற்ற முறையில் பணம் பெற்றுக்கொள்ள அந்தச் சிறுவன் விரும்பவில்லை.

பிறகு, ஜயராமனின் தாயின் வைத்தியச் செலவு யாவையும் ராமநாதன் செய்தார். தாயும் மகனும் பிற்பாடு ராமநாதன் வீட்டோடு வந்து அமர்ந்தார்கள்.

நேர்மை உள்ளம்

ஆர். ஜயா

கோடை வெயில் வெளியே கொளுத்திக்கொண்டிருந்தது. அதைவிட அதிகமாகக் கொதித்தது கோபுவின் உடம்பு. அப்போதுதான் டாக்டர் ஓர் இன்ஜெக்ஷன் கொடுத்துவிட்டுச் சென்றார். அவன் தாய் அவன் அருகிலேயே அமர்ந்திருந்தாள். டாக்டரை வழிகூட்டிவிடச் சென்ற அவன் தந்தை, "டாக்டர்! அபாயம் ஒன்றுமில்லையே?" என்று கேட்டார். அவர் குரலிலே பயம் கலந்திருந்தது.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. அதிர்ச்சி ஜுரம்தான். வீட்டிற்குப் போனதும், வேறு மருந்து கொடுத்தனுப்புகிறேன். மூன்று வேளை கொடுங்கள், ஜுரம் தணிந்துவிடும்" என்று டாக்டர் கூறிவிட்டுச் சென்றார்.

கோபு சற்று நேரத்திற்கொரு முறை, "ராமு திருடவில்லை, ஸார்; அவன் திருடன் இல்லை!" என்று முனகிக்கொண்டே இருந்தான். இதன் காரணம் தெரியாது. அவன் பெற்றோர் விழித்தனர்.

கோபுவும் ராமுவும் ஒரே வகுப்பு மாணவர்கள். கோபு மாளிகை வாசி. ஒரே மகன் என்ற காரணத்தால் மிகவும் செல்லமாக வளர்க்கப் பட்டான். ஆனால் ராமுவோ அப்படியல்ல. மண் குடிசையிலே வாழ்பவன். அவனுடைய பெற்றோர்களுக்கு அவன் ஆறாவதாகக் கணக்கிடப் பட்டவன். அத்துடன் வறுமைப் பிணியிலே முடங்கிக் கிடப்பவன்.

கோபு செல்வந்தர் வீட்டு மகன் என்ற காரணத்தாலோ, அல்லது வருடம் தவறாது அவன்தான் வகுப்பிலே முதலில் வருகிறான் என்ற காரணத்தாலோ, அந்தப் பள்ளியிலே அவன் மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருந்தான். தலைமை ஆசிரியர் முதல் பியூன் முனிசாமி வரை அவனிடம் அன்பு காட்டி வந்தனர். வகுப்பு மாணவர்களோ அவன் சொல்லுக்குக் குறுக்குச் சொல் ஒன்றும் வழங்காதிருந்தனர்.

அந்த வருடந்தான் ராமு நான்காம் படிவத்திலே வந்து சேர்ந்தான். அவன் ஏழை வீட்டு மகன் என்பதை வந்ததுமே எடுத்துக் காட்டிவிட்டது, அவனது எளிமையான உடை. ஆனால் அவனது விசாலமான நெற்றியும், குறுகுறுப்பான பார்வையும் அவன்தான் அங்குள்ள அத்தனை மாணவர்களையும் விட அறிவாளி என்று பறைசாற்றியது.

ராமு வந்து அரை வருடப் பரீக்ஷையும் முடிந்து விட்டது. ஒவ்வொரு பரீக்ஷையிலேயும் முதலில் வரும் கோபு இந்த இரண்டு பரீக்ஷையிலேயும் குறைந்துவிட்டான். குறைந்துவிட்டான் என்று சொல்வதற்குமில்லை. அவன் அதே அளவிலேதான் மார்க்குகளைப் பெற்றான். ஆனால் ராமு அவனைவிட அதிக

மான மார்க்குகளைப் பெற்று விட்டான். இதுவே கோபுவுக்கு அவன் மீது எரிச்சலை உண்டாக்கியது.

அத்துடன் எல்லா மாணவர்களைப்போல அவனும் மேல் விழுந்து பேச வருவான் என்று எதிர்பார்த்தான். ஏமாற்றப்பட்டான். இரண்டொரு முறை இவனாக வலியச் சென்று பேசிய போதும் ராமு கேட்ட கேள்விக்குப் பதில் கூறினானே தவிர, கோபுவிடம் அதிகமாக ஒன்றும் பேசவில்லை. 'ஏழைப் பையனுக்கு இத்தனை வீறாப்பா! என்றாவது இவன் கர்வத்தை அடக்க வேண்டும்' என்று திட்டமிட்டிருந்தான்.

அன்று அவன் பள்ளியிலே ஒரே கலவரமாக இருந்தது. காரணம் தலைமை ஆசிரியரின் பேனா களவு போய்விட்டதுதான். புத்தம் புதிய பார்க்கர் பேனா காணாமல் போய்விட்டால் ஆசிரியர் சும்மா இருப்பாரா?

அன்று காலை நான்காம் படிவத்தைப் பார்வையிடும் போது தன் கையிலே வைத்திருந்ததாகவும், அதன் பிறகுதான் அது காணவில்லை என்றும் தலைமை ஆசிரியர் நினைவு படுத்திக் கொண்டார். உடனே அந்த வகுப்பு ஆசிரியரை வரவழைத்து விசாரித்தார். மாணவர்களைக் கேட்டுச் சொல்வதாகத் தன் வகுப்புக்கு வந்து அவர்களை விசாரித்தார். எல்லா மாணவரும் 'எடுக்கவே இல்லை, நான் பார்க்கவே இல்லை' என்று கூறி விட்டனர். அந்தச் சமயத்திலேதான் கோபு ஆசிரியரிடத்திற்குச் சென்று அவர் காதில் ஏதோ ரகசியமாகச் சொன்னான். உடனே ஆசிரியர் ராமுவின் இருப்பிடம் வந்தார்; அவனுடைய புத்தகப் பையைக் கீழே கவிழ்த்தார்; முதலில் 'லொட்'

டென்று விழுந்தது பார்க்கர் பேனு தான். அவ்வளவுதான், ஆசிரிய ரின் கண்களிலே கனல் வீசியது. அனலெனப் பேச்சை அள்ளி வீசினர். வகுப்புக்கும் ஆசிரிய ருக்கும் கெட்டபெயரைத் தேடித் தந்த ராமுவைச் சும்மா விடக் கூடாது என்று கறுவினர். அன்று மாலை இறைவன் வணக்க மண்ட பத்திலே (Prayer Hall) அனைவர் முன்னிலையிலும் 'திரு டன்' என்று எழுதப்பட்ட அட் டையைக் கழுத்தில் தொங்க விட்டார்.

ராமு எவ்வளவோ மன்றாடி ஞன்; தான் எடுக்கவில்லை என்று மண்டியிட்டான்; மன்னிப்புக் கேட்டான்; ஆனல் ஆசிரியர் அதைக் காதில் போட்டுக் கொண் டால்தானே?

கண்ணீரும் கம்பலையுமாய், ராமுவின் எண் சாண் உடம்பும் ஒரு சாணுகக் குறுகி இறைவணக் கக் கூட்டத்திலே நின்றுகொண் டிருப்பதைப் பார்த்த போது கோபுவின் கல்மனமும் கரைந் தது. அன்று தமிழாசிரியர் குற ளுக்கு விளக்கவுரை தந்தது, அவன் கவனத்துக்கு வந்தது. அஞ்சாமையின் அவசியத்தை எடுத்துக் கூறிவிட்டு, அதே நேரத்தில் அஞ்சும் மனப்பான்மை யும் வேண்டும் என்று எடுத்துக் கூறினர். எதற்கு அஞ்ச வேண் டும்? நேர்மையிலிருந்து விலகும் போது, அஞ்சத்தான் வேண்டும்; கடமையிலிருந்து தவறும் போது, அஞ்சத்தான் வேண்டும்; உண் மையிலிருந்து மாறபடும் போது, அஞ்சத்தான் வேண்டும்; அதை விட்டு இவற்றிற்கெல்லாம் அஞ் சாது நடந்தாலோ, அது அறி வுடைமை ஆகாது; பேதமை யாகும் என்பதை எடுத்துக்காட்ட, ஒரு குறளும் எடுத்துரைத்தார்.

"அஞ்சுவது' அஞ்சாமை பேதைமை
அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தோழில்"

இது கவனம் வந்ததுதான் தாம தம், கோபுவின் உடலிலே ஒரு நடுக்கம், உள்ளத்திலே ஒரு வலி கண்டது. அவனுடைய உண்மை உள்ளம் அவனை விரட்டியது; தலைமை உபாத்தியாரிடத்திற்கு ஓடிச் சென்ருன்.

'ஸார்! ராமு திருடவில்லை; நான்தான் எடுத்து, ராமுவின் பையிலே போட்டு விட்டேன்; அவனுக்குத் தெரியாது; அவனை விட்டு விடுங்கள்; தவறு என் னுடையதுதான்" என்று கூறும் போதே 'ஓ' வென்று அழுது விட்டான். தலைமை ஆசிரியரும் வகுப்பு ஆசிரியரும், ஆச்சரிய மடைந்தனர். அதே நேரத்தில் தீர விசாரிக்காமல் அவசரப்பட்டு ராமுவை அவமானப்படுத்தி விட்டோமே என்று வருந்தினர். கோபுவை மன்னித்து, அவனுக்கு அறிவுரைகள் கூறியனுப்பியதோடு, தாங்களும் ராமுவிடம் மன்னிப் புக் கேட்டுக்கொண்டனர். அன்று இரவு கோபு வீட்டிற்கு வந்து படுத்தவன்தான். ஜுரம் அவனைப் பற்றிக்கொண்டது. பள்ளிச் சம்பவமே அவன் கண்முன் காட்சியளித்துக்கொண்டிருந்தது.

இந்தச் சம்பவம் நடந்து ஒரு வாரத்திற்குமேல் ஆகியது. பள்ளி யின் வருடாந்திர நாடகம் இன் னும் ஒரு வாரந்தான் இருந்தது. கோபு நாடகத்திலே முக்கிய பாகம் எடுத்துக்கொண்டிருந்

வாத்தியார்: குழந்தைகளே! நீங்கள் உங்கள் அறிவை பெருக்கிக் கொள்ளுங்கள்.

பையன்: எத்தனையாலே ஸார்?

—மஹாலிங்கம், தஞ்சை

தான். ஆனால் திடீரென்று ஜுரத்தின் காரணமாக அவன் வர இயலாமற்போய் விட்டது. ஆசிரியர் கண் கலங்கினார். "டிக்கட் எல்லாம் விற்பனை ஆகி விட்டது இனி என்ன செய்ய முடியும்? இன்னும் ஒரு வாரத்திற்குள் யாரைத் தயார் செய்வது?" என்று யோசித்தார். சட்டென்று ராமுவின் கவனம் வந்தது. அவனிடம் விஷயத்தைக் கூறினார். எப்படியாவது கோபுவின் பாகத்தை ஏற்று நடித்து, பள்ளியின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ராமுவும் சம்மதித்தான். நான்கு தினங்களிலே தனக்கென்று கொடுத்த வசனத்தை மிகவும் உணர்ச்சி தோன்றக் கூறினான். நடித்தும் காட்டினான். ஆசிரியர்கள் அவனுடைய சுறுசுறுப்பைக் கண்டு ஆனந்தமடைந்தனர்.

அன்று நாடக தினம். ராமு தனக்கென்று கொடுத்த பார்ட்டை மிகவும் திறம்பட நடித்துக் காட்டிவிட்டான். ராமு அழும்போது சபையோரும் அழுதனர். அவன் சிரிக்கும் போது சபையோரும் வீறு கொண்டெழுந்தனர். அவன் கண் கலங்கும் போது அனைவரும் கலங்கினர். "பேஷ்—சபாஷ்— ஜோர்—அற்புதம்-பிரமாதம்— எக்ஸ்லெண்ட்" என்று ஆரவாரித்தனர். அனைவராலும் ராமுவுக்கு முதல்பரிசாக ஒரு சவரனில் டாலர் ஒன்று அளிக்கப்பட்டது. ராமு அப்பரிசை மேடையில் வந்து பெறும் போது சபையோர் அனைவரும் கரகோஷம் செய்தனர். அங்கே கோபுவும் வந்திருந்தான். மெலிந்த உடலோடு அவன் கண்களிலே நீர் முட்டி நின்றது. 'இவ்வளவு அறிவாளியை நாம் பகைத்துக் கொண்டோமே' என்று ஏங்கியது அவன் மனம். ராமு மெடலைப் பெற்றதும், தலைவர் காதில் ஏதோ ரகசியமாகக் கூறியதை கோபு கவனித்தான். அடுத்த கணம் மைக்கின் முன்னால் ராமு நின்று பேசுவதையும் கவனித்தான்.

"சபையோருக்கு!

வணக்கம். உங்கள் அன்பிற்கு நான் பாத்திரமானவன் என்பதை எண்ணிப்பார்க்கும்போது ஆனந்தம் கொள்கிறேன். ஆனால் நான் இப்பரிசைப் பெற முற்றிலும் தகுதியற்றவனாக இருக்கிறேன் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்த



விரும்புகிறேன். இந்நாடகத்திற்கென்று சுமார் ஒரு மாதத்திற்கு மேலாகவே இதற்கென்று கஷ்டப்பட்டிருக்கும் எனது நண்பன், உடல் நலக் குறைவால் இன்று நடிக்க முடியவில்லை. நோய் வராதிருந்தால் என்னைவிட அவன்தான் நன்றாக நடித்திருப்பான் என்பது என் திடமான நம்பிக்கை. இவ்வளவு நாட்கள் அவன் பட்ட கஷ்டமெல்லாம் வீணாகி விட்டது. ஒரே நாளில் நான் இப்பரிசைத் தட்டிக்கொண்டுவிட்டேன். இது மிகவும் அநியாயமானது. ஆகையால் உங்களால் அளிக்கப்பட்ட இப்பரிசை உங்கள் முன்னிலையில் அவனுக்கே அளிக்க முன் வந்துள்ளேன். அதுதான் நியாயமுங்கூட" என்று கூறிக்கொண்டே கோபுவின் இருப்பிடம் வந்து அந்த மெடலை அவன் சட்டையில் மாட்டினான். சபையோர், அனைவரும் ஆச்சரியம் கொண்டனர். ராமுவின் நேர்மை உள்ளத்தைக் கண்டு கோபு வியந்தான். கோபுவின் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் ராமுவின் கையை நனைத்தது.

பூனை எங்கே?

தில்லைவாணன்

"மியாவ் . . மியாவ் . . மியாவ்!" என்று பூனை கத்தியது. என் வீட்டில் எங்கோ ஒரு மூலையிலிருந்து இந்தச் சப்தம் வந்தது. ஆபீஸ் அறையில் உட்கார்ந்திருந்தவன் வேலையை விட்டு விட்டு, கவனிக்க ஆரம்பித்தேன். "ஏது இங்கே பூனை?" என்று எனக்கு யோசனை வந்து விட்டது.

நான் இந்த வீட்டுக்குக் குடித்தனம் வந்தே ஒரு வாரம் ஆகியிருந்தது. அதுவும் விவாகமாகி அப்பொழுதுதான் தனிக் குடித்தனம் வைத்திருந்தேன். என் மனைவி பார்வதிக்குத் துணையாக அவள் தங்கை சரசுவும் கூட வந்திருந்தாள். சரசு பத்து வயசுச் சிறுமி. படு சுட்டி!

"மியாவ்.. ..மியாவ்......"

உற்றுக் கவனித்தேன். அசல் பூனையின் கத்தல்தான். சமயலறையிலிருந்து சப்தம் வருவது போல் தோன்றியது.

"மியாவ்....மியாவ்!"

எழுந்து போனேன்.

'சமையலறையில் ஏதோ ஒரு போக்கிரிப் பூனை, என் மனைவியும் அவள் தங்கையும் இல்லாத சமயம் பார்த்து, எதையோ உருட்டித் திருட்டுத்தனம் செய்கிறதோ?' என்ற பயம் எனக்கு.

அவர்கள் எங்கே போயிருப்பார்கள்? ஒருகால் கிணற்றடிக்குப் போயிருப்பார்களோ, என்னவோ?

"மியாவ்..மியாவ்..மியாவ்!"

நான் அங்கே போனபோது, பார்வதியும் சரசுக் குட்டியும் நான் நினைத்தபடி வேறு எங்கும் போய்விடவில்லை. பிடித்து வைத்த கல்லுப் பிள்ளையார் மாதிரி அவ்விருவரும் அமர்ந்திருந்தனர். அவர்கள் முகத்தில் விஷமச் சிரிப்புத் தோன்றி விளையாடிக் கொண்டிருந்தது. அங்கே பூனையினால் எந்த நாசத்தையும் காணோம். பூனையையும் காணோம்!

"பூனை கத்தியது போலிருந்தது. எழுந்து வந்தேன்" என்றேன் நான், அவர்களைப் பார்த்து.

"இங்கே பூனையுமில்லை; யானையுமில்லை. பானைதான் இருக்கு" என்று சிரித்தாள் என் மனைவி.

"அதிசயந்தான். பூனையில்லாமல் பூனைச் சத்தம் ஏது?" என்று திரும்பினேன்.

"இந்தாருங்கோ, பூனையைக் காண்பிக்கிறேன்" என்றாள் பார்வதி.

"எங்கே, காட்டு பார்க்கலாம்?" என்று ஆவலோடு கேட்டேன்.

"இதோ" என்று அவள் தன் தங்கை சரசுவைக் காட்டினாள்.

"மியாவ்.. மியாவ்..மியாவ்!"

"அடடா! அந்த மியாவ் கடைசியில் இந்தச் சரசுக் குட்டிதானா? அசல் பூனை மாதிரி கத்துகிறாளே" என்று சரசுவின் காதைப் பிடித்துத் திருகினேன்.

அக்காள் தங்கை இருவருமே விழுந்து விழுந்துச் சிரித்தார்கள். நானும் சிரித்தேன்.

''மணி ஆச்சு! நீங்கள் எழுந்து சாப்பிட வருவீர்களாக்கும் என்று பார்த்தேன். வரக் காணேம். சரசு உங்களை 'இங்கிருந்தே கூப்பிட்டு விடுகிறேன்' என்ருள். மியாவ் பாஷையில் அவள் உங்களையே இழுத்து வந்து விட்டாள், பார்த் தீர்களா!' என்று அவள் தங்கை யின் சாமர்த்தியத்தைப் பற்றிப் பெருமையடித்துக் கொண்டாள்.

* * * *

அன்றொருநாள் சரசு பூனை போலக் கத்தியதோடு சரி. மறுபடி எத்தனை தரம் கேட்டுப் பார்த்தும் அவள் என் எதிரில் கத்த மறுத்து விட்டாள். நானும் இதைப்பற்றி மறந்து விட்டேன்.

ஒரு மாசத்துக்குப் பிறகு, ஒரு நாள் நான் ஆபீசிலிருந்து வீடு திரும்பும் போது ராத்திரி பத்து மணியாகி விட்டது.

சாப்பிட்டபின் பார்வதி வந்து, ''எட்டு மணியிருக்கும், சரசு ஒரு வேடிக்கை பண்ணினுள்! தெருவில் ஒரு பூனை கத்தியது. இவளும் 'மியாவ்..மியாவ்' என்று கத்தினுள். தெருவிலிருந்து பூனை கத்த,இவள் உள்ளேயிருந்து அசல் பூனைபோலவே கத்த - இப்படியாக ஒரே வேடிக்கையாக இருந்தது. ஆனல் அந்தப் பாழாய்ப் போன பூனைஇங்கே வரவேயில்லை. இருட்டில் அது வெளியில் இருப்பதும் தெரியவில்லை. கொஞ்ச நேரம் கழித்து, அதன் சப்தம் நின்றே போய்விட்டது. அது எங்கோ ஓடி விட்டது போலிருக்கிறது'' என்று கூறி நிறுத்தினுள். அப்பொழுது சரசு நிம்மதியாக ஒன்றும் அறியாதவள் போல் தூங்கிக் கொண்டிருந்தாள்.

''என்னை ஏமாற்றியது போல், நிஜப் பூனையை உன் சரசுவினுல் ஏமாற்ற முடியாது. தெரிந்து கொள். அதற்குக் குரல் வித்தியாசம் தெரியாமல் போகாது'' என்று கூறிவிட்டுப் படுக்கப் போனேன்.

பொழுது விடிந்தது.

காலையாகாரம் செய்து விட்டு, பத்திரிகை படிப்பதில் ஈடுபட்டேன். அப்பொழுது சங்கரன் என்பவன் ஓடி வந்தான். அவன் பத்து வயசுச் சிறுவன். என் ஆபீஸ் நண்பர் ஒருவரின் மகன். நாலு வீடு தள்ளிக் குடியிருந்தான்.

சங்கரனும் வாலுப் பையன் தான். குரங்குச் சேஷ்டையில்

அவனை மிஞ்ச யாராலும் முடியாது. அவனுக்கு வாலில்லாத குறை ஒன்றுதான். அவனைக் காணும்போது, "வாலில்லாக் குரங்கு வந்திருக்கு" என்று மனசுக்குள்ளேயே சொல்லிக் கொள்வேன். அவன் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவான்; போவான். சொந்தம் கொண்டாடி வீட்டில் எங்கும் போவான். அவனுக்குத் தடை ஏதுமில்லை.

சங்கரன் வந்ததும், "என்ன மாமா! உங்க வீட்டிலே பூனை வளக்கிறுப் போலிருக்கு. எப்போ புடிச்சு இங்கே பூனையிருக்கு? கொஞ்சம் காட்டுங்கள், மாமா. பார்க்கணும் போல ஆசையாயிருக்கு" என்றான்.

"எங்க வீட்டிலே பூனையிருக்குன்னு உனக்கு யாருடா சொன்னு?" என்றேன் நான் சிரிப்புடன். அவன் ஏன் இப்படித் திடீரென்று கேட்கிறான் என்பது தான் எனக்கு விளங்கவில்லை.

"ராத்திரி உங்கவீட்டிலேருந்து பூனை கத்தினது மாமா. நானும் தெருவிலிருந்து பூனை போலக் கத்தினேன். வெளியே வருமான்னு பார்த்தேன். வரலே மாமா. கத்திக் கத்திப் பாத்துட்டு ஓடிட்டேன், மாமா" என்றான் சங்கரன்.

"ஏண்டா, சங்கரா! நீயும் ஒரு பூனைதானு? எங்கே, கத்து பார்க்கலாம்" என்று அவனைத் தூண்டி விட்டேன்.

"மியாவ்..மியாவ்..மியாவ்."

சங்கரன் பூனை போலவே கத்தினுன். கொஞ்சங்கூட வித்தியாசமில்லை.

திடீரென்று ஏதோ நினைவுவரவே நான் பீரோவைத் திறந்து, ஒரு பொம்மைப் பூனையை அவன் முன் கொண்டுவந்து வைத்தேன். "ராத்திரி கத்தியது இதுதான்" என்றேன்.

"பொய்! யாரை ஏமாத்தப் பார்க்கிறீர்கள்?"

"இல்லேடா, நிஜமாகத்தான்."

"அப்படியானால், இப்போ கத்தச் சொல்லுங்கள் மாமா, பார்க்கலாம்" என்றான் அவன்.

"இது வெளியில் இருந்தால் கத்தாது. பீரோவுக்குள் பூட்டி வைத்தால் கத்தும்" என்று பீரோவுக்குள் வைத்தேன். பீரோவை மூடினேன். என்ன ஆச்சரியம்! "மியாவ்....மியாவ்....மியாவ்" பீரோவுக்குப் பின்னுலிருந்து பூனை கத்தும் சப்தம் வந்தது. சங்கரனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. "என்ன மாமா, இது! அதிசயமாயிருக்கே! இது எப்படி மாமா?" என்றான்.

நான் சொல்லுவேனு? அவன் பொம்மைப் பூனை கத்தியதாகவே எண்ணிக்கொண்டு போனுன்.

"சரசு! இனிமே நீ வெளியிலே வரலாம். நீ பின்னுலே ஒளிந்து கொண்டதைப் பார்த்துவிட்டுத் தானே நான் பீரோவினுள் பொம்மையை வைத்தேன்?" என்றேன். சரசு பூனைப்போலச் சிரித்துக் கொண்டே போய்விட்டாள்.



போட்டோ எடுப்பவர்: நன்றாகச் சிரியுங்கள், ஸார்!

தாடிக்காரர்: நான் சிரித்துக் கொண்டுதான் ஸார், இருக்கிறேன். வேண்டுமானுல் இந்தக் கத்திரிக் கோலால் வெட்டிப் பாருங்கள், தெரியும்.

—வண்டு.

பாராட்டுப் பெற்ற பரிசுக் கதை

தாதியின் வெற்றி

'ரங்கன்'

சுவேதபுரியில் அன்று ஒரே கொண்டாட்டம். தெருக்களில் புஷ்ப தோரணங்கள் தொங்கின. கண்ணைப் பறிக்கும் சித்திர வேலைப்பாடுகளுடன் அமைந்த புஷ்பப் பந்தல்கள், மந்தாரை, தாமரை, மல்லிகை போன்ற வாசனைப் புஷ்பங்களால் வேயப்பட்ட வளைவுகள் பட்டணத்தை அழகு செய்தன.

ஜயபேரிகை கொட்ட, மேள தாளங்கள் ஒலிக்க, முன்னும் பின்னும் வீரர்கள் புடைசூழ நான்கு குதிரைகள் பூட்டிய அழகான ரதம் வந்து கோட்டை வாசலில் நின்றது. பெண்கள் புஷ்பங்களை வாரி இறைத்து, ஆரத்தி எடுக்க, தளபதி ரவிசந்திரன் ரதத்திலிருந்து இறங்கினான். மக்களின் புன்னகையை அன்புடன் ஏற்றுக்கொண்டு கோட்டைக்குள் நுழைந்தான்.

கோட்டையில் நுழைந்த அவனை அரசர் எதிர்கொண்டு வரவேற்றார். "ரவி! உன் வீரத்தை மெச்சுகிறேன். நீ உதயபுரிப் போரில் பெற்ற வெற்றியும் காட்டிய வீரமும் பாராட்டத் தகுந்தவை. உன்னை நாட்டின் பிரதம தளபதியாக உயர்த்தப் போகிறேன்" என்று கூறினார். அப்போது, அரசகுமாரி ஜயந்திகா அங்கே வந்தாள். ரவியைக் கண்டதும் அவள் முகம் மலர்ந்தது.

"ரவி! எப்பொழுது வந்தாய்?"

"இன்றுதான்" என்று சுருக்கமாய்க் கூறி, அவள் முகத்தைப் பார்க்க விருப்பமில்லாதவனாய் அப்பால் நகர்ந்தான் தளபதி.

ஜயந்திகா பற்களை நறநற வென்று கடித்துக்கொண்டாள். அவன் தன்னை அலட்சியம் செய்தது, அவள் கோபத்தை அதிகப்படுத்தியது. கண்கள் சிவந்தன. கோபத்தை அடக்கிக்கொண்டு, தன் அறையை நோக்கிச் சென்றாள்.

ரவிசந்திரனும் தன் அறைக்குச் சென்றான். அவனுக்குத் திடீரென்று தன் தம்பியின் நினைவு வரவே, கண்களில் நீர் மல்கியது.

குணசேகரன் என்ற அரசன் விதர்ப்ப தேசத்தை ஆண்டு வந்தான். அவனுக்கு ரவிசந்திரன், வீராங்கன் என்ற இரண்டு பிள்ளைகள் இருந்தனர்.

வித்தியாநகர அரசன் கருநாகன் திடீரென விதர்ப்ப தேசத்தை முற்றுகையிட்டான். விதர்ப்ப நாட்டுச் சைனியம் முற்றுகையை எதிர்பார்க்காததால் படுதோல்வி அடைந்தது. அரசனும் அரசியும் எதிரிகளின் அம்புகளுக்குப் பலியானார்கள். ஆனால் ரவிசந்திரனும், வீராங்கனும் சுரங்கத்தின் வழியாக வெளியேறி உயிரைக் காப்பாற்றிக்கொண்டார்கள். ஆனால் விதி அவர்களையும் பிரித்துவிட்டது.

தம்பியைத் தேடித் தேடி

அலைந்த ரவிசந்திரன், சுவேத புரியை அடைந்தான்.

சுவேதபுரி அரசர் ஒரு முரட்டு அரபுக் குதிரையை வளர்த்து வந்தார். அதை யாராலும் அடக்க முடியவில்லை.

அதை அடக்குபவருக்கு ஆயிரம் பொன் பரிசு தருவதாக அரசர் பறைசாற்றி இருந்தார். இந்தச் செய்தியைக் கேட்ட ரவிசந்திரன் போட்டியில் கலந்துகொள்ள முடிவு செய்துவிட்டான். சாவு! அல்லது ஆயிரம் பொன்!

அவன் சிறியவனாக இருந்ததால் பரந்த மைதானத்தில் நுழைந்த பொழுது மக்கள் அவனைக் கேலி செய்தார்கள். ஆனால் ரவிசந்திரன் தன் காரியத்தில் கண்ணாக இருந்தான்.

போட்டியில் கலந்துகொண்ட அவனுக்கு நல்ல காயம் பட்டது. மக்கள் ஆர்ப்பாட்டம் அதிகமாகியது. கடைசி விநாடிகளில் அவன் சாமர்த்தியமாக அதனை அடக்கி விட்டான்! இல்லாவிட்டால் குதிரை கழுத்தில் சுருக்கு விழுந்திருக்குமா?

மக்களின் கரகோஷம் விண்ணைப் பிளந்தது. அரசர், அவனுடைய தோள் வலிமையை மெச்சி, ஆயிரம் பொன் கொடுத்தவுடன் அவனைத் தன் சேனையில் வேலைக்கு அமர்த்திக்கொண்டார். சில நாட்களிலே தளபதியாகவும் ஆனான்.

பதவி கிடைத்தாலும் ரவிசந்திரன் தன் தம்பி வீராங்கனை மறக்கவில்லை. அவனைத் தேடச் சேவகர்களை எல்லாத் திசைகளிலும் அனுப்பினான். ஆனால் அவன் முயற்சி பலனளிக்கவில்லை.

தளபதி ரவிசந்திரன் உதயபுரி அரசனைப் போரில் வென்ற பிறகு அவன் புகழ் எங்கும் பரவியது. சுவேதபுரி தனக்குத் திறமை வாய்ந்த சேனாதிபதி கிடைத்ததை எண்ணி இறுமாப்பு அடைந்தது!

அரசகுமாரி ஜயந்திகா, தளபதியை மணம் செய்துகொள்ள விருப்பங்கொண்டாள்.

ஜயந்திகா கர்வம் உடையவள். முன் கோபி; சுமுகமாகப் பேசவே மாட்டாள். வேலைக்காரர்களையும், பணிப் பெண்களையும் எப்பொழுதும் மிரட்டி விரட்டிக்கொண்டே யிருப்பாள்.

ரவிசந்திரன் அவளை மணக்க, ஜயந்திகா செய்த முயற்சிகள் எல்லாம் வீணாயின. ரவிசந்திரன் அவளைத் தங்கையைப்போல் பாவித்தான்.

தன்னை ரவிசந்திரன் விரும்பாத காரணம் ஜயந்திகாவுக்குத் தெரியாது. தன்னிடம் உள்ள குறைகளை அவள் அறியவில்லை.

ஜயந்திகாவின் தாதி, மஞ்சுளா நல்ல குணமுள்ளவள். எல்லோரிடமும் அன்பாகப் பழகுவாள். எப்பொழுதும் சிரித்துக்கொண்டே இருப்பாள். சூது வாது அறியாதவள். அவளிடத்திலே ரவிசந்திரனுக்கு அன்பு அதிகம். தளபதி ரவிசந்திரன் சமுத்திரத்துக் கப்பாலுள்ள ஜம்பூகத் தீவுக்கு அரசன் கட்டளைப்படி சிறு படையுடன் புறப்பட்டான்.

அவன் இதை மஞ்சுளாவிடம் தெரிவித்து, நான்கு வாரங்களில் திரும்பி வருவதாயும், தன் ஞாபகமாய்த் தன் மோதிரத்தை வைத்துக்கொள்ளும்படியும் அவளிடம் கொடுத்துச் சென்றான்.

இதை எப்படியோ அறிந்த அரசகுமாரிக்குக் கண்கள் சிவந்தன.

"பார்க்கிறேன்" என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டாள். அன்றிலிருந்து அவள் கோபம் தாதியின் மேல் பாய்ந்தது. அவள் செய்த காரியங்களில் எல்லாம் குற்றங்கள் கண்டு பிடித்தாள். அதோடு அவள் நிற்கவில்லை.

மந்திரவாதி ஒருவனின் உதவியால் தாதியைத் தொலைத்துவிடவும் திட்டம் போட்டாள். ஆனால் வெறும் பிரயாசைதான் மிச்சம்.

மந்திரவாதி, மஞ்சுளாவை நாட்டைவிட்டுத் துரத்த எண்ணி, ஒரு மாயக் குதிரையைச் சிருஷ்டித்துப் பூங்காவனத்தில் நிறுத்தினான்.

ஜயந்திகா கொஞ்ச நாளாகத் தன்னிடம் கோபமாகப் பழகுவதை மஞ்சுளா கவனிக்காமல் இல்லை. தான் அங்கே இருப்பது சரியல்ல என்று அவளுக்குப் பட்டது. ஒருநாள் யாருக்கும் சொல்லிக் கொள்ளாமல் ஆண் வேடத்திலே அரண்மனைப் பூங்காவனத்திலுள்ள அக்குதிரையிலேயே நாட்டைவிட்டு வெளியேற அவள் திட்டமிட்டாள். அது மந்திரவாதியின் குதிரை என்று அவளுக்குத் தெரியும். எனினும் பறந்து செல்லும் என்றும் தெரியும். ஆனால் அந்தக் குதிரை மேல் அவள் அமர்ந்ததும், குதிரை மேலே எழும்பியது. சிறிது நேரத்தில் மாட மாளிகைகள், கோபுரங்கள், எல்லாம் தாண்டி மேக மண்டலத்திலே நுழைந்தது. ஆனால், எங்கே இறங்குவது? எங்கே இறங்குவது என்பது இருக்கட்டும். எப்படி இறங்குவது என்பதை மஞ்சுளா தெரிந்து கொள்ளவில்லை. மந்திரவாதி இதை ஜயந்திகாவுக்கு விளக்கிய போது அவள் இல்லை. எனவே மஞ்சுளா நடுங்கிவிட்டாள். பயம் அவளை ஆக்கிரமித்தது. அவள் பைத்தியம் பிடித்தவள் போல் ஒன்றும் புரியாமல் கால்களை உதைத்துக்கொண்டாள். ஆத்திரத்தில் பிடரியின்மேல் ஓங்கி ஒரு குத்து விட்டாள். ஆனால் என்ன விந்தை! குதிரை மெல்லக் கீழே இறங்கியது. அவள் ஒரு மைதான வெளியில் இறங்கினாள். சுற்றுமுற்றும் பார்த்தாள். தூரத்தில் ஒரு மனிதன் வில்லும் அம்பும் ஏந்தி வந்து கொண்டிருந்தான்!

ரவிசந்திரன் ஜம்பூகத் தீவுக்குப் போய்த் திரும்பி வரும்போது,

அவன் பயணம் செய்த கப்பல் புயலில் சிக்கியது. அவனைத் தவிர மற்றவர்கள் கடலில் மூழ்கி மாண்டனர். தளபதி மாத்திரம் உயிர் தப்பிப் பிரக்ஞையில்லாமல் கரையில் வீழ்ந்து கிடந்தான்.

அவன் எழுந்தபொழுது அவனைச் சுற்றிச் சிலர் வில்லும் அம்பும் ஏந்தி நின்றார்கள். அவர்களில் ஒருவனுடைய முகம் அவனுக்குப் பரிசயமானதுபோலத் தோன்றியது. ஆனால் எங்கே, எப்பொழுது பார்த்திருக்கிறோம் என்ற நினைவு வரவில்லை. அவன் தான் அந்தக் கூட்டத்திற்குத் தலைவன்.

"நீ யாரப்பா?" என்றான் தலைவன். தளபதி தன் கதையைச் சொன்னான். ஆனால் தான் தளபதி என்று சொல்லாமல் "நாடோடி" என்று மட்டும் கூறினான்.

அவர்கள் அவனைத் தம் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

சுவேதபுரி அரசன் கொடுங்கோல் ஆட்சி நடத்துவதால் அவரைப் பதவியிலிருந்து வீழ்த்தப் போவதாகவும் அவர்கள் கூறினார்கள். அதைச் சொன்னபோது தலைவன் கண்களில் நீர் சுரந்தது. அதைக் கண்ட ரவிசந்திரன் ஆச்சரியப்பட்டான். "ஐயா, ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டான்.

"அது ஒரு பெரிய கதை! என் தந்தை விதர்ப்ப தேசத்தின் அரசராய் இருந்தார். அவருக்குச் சண்டையே பிடிக்காது. எந்த விஷயத்திலும் சாந்தமாகவே வேலை செய்ய வேண்டுமென அவர் கூறுவார். நானும் என் அண்ணனும் எப்பொழுதாவது சண்டை செய்தால் கூட அவர் அன்று சாப்பிடவே மாட்டார். ஆனால் இன்று நான் சண்டை செய்யச் சித்தமாக இருக்கிறேன். அவர் இப்போது இருந்தால் அவர் மனம் என்ன பாடுபடும்?" என்றான் தலைவன் விசனத்துடன்.

ரவி துள்ளி எழுந்தான். "அப்படி என்றால் உன் பெயர் வீராங்கன்தானே?" என்றான் ஆச்சரியத்துடன்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"தம்பி! நான்தான் உன் அண்ணன்! உன்னை எங்கெல்லாமோ தேடினேன். அகப்படவில்லை. சந்தேகமாகயிருந்தால் என் கையில் விதர்ப்பதேச மோதிரம் உள்ளது. பார்க்கலாம்!" என்றான். ஆனால் மோதிரத்தைத் தான் மஞ்சுளாவிடம் கொடுத்து விட்டானே!

மற்றவர்கள் ஒன்றும் புரியாமல் விழித்தனர். தலைவன் முதலில் தயங்கினான். பிறகு தளபதி எல்லா அடையாளங்களும் சொல்லவே அவன் அண்ணனை அடையாளம் கண்டுகொண்டான். விதியால் பிரிந்த அவர்கள் விதியாலேயே ஒன்று சேர்ந்தார்கள்.

தளபதி, அவர்கள் குடிசையிலேயே காலம் கழித்து வந்தான். ஒரு நாள் மாலை அம்பும் வில்லும் கையில் ஏந்தி வெளியே போனபோது, வழியில் ஓர் இளைஞனைக் கண்டான். அவனைப் பார்த்து, "நீ யார்! உத்தரவின்றி இங்கே எப்படி வந்தாய்? என்றான் தளபதி.

"நீ யார் என்னைத் தடுக்க?" என்றான் இளைஞன்.

தளபதிக்கு ரோசம் தாங்க வில்லை. கத்தியை உறையிலிருந்து எடுத்தான். இளைஞனும் தயங்க வில்லை. அவனும் வாளை உருவினான்.

போர் நடந்தது. முடிவில் இளைஞன் தலைப்பாகை கீழே உருண்டது. கூந்தல் வெளியே தெரிந்தது. அவள் பெண்! இளைஞனல்ல! ஆ, இவள் யார் மஞ்சுளாவா? இவள் எப்படி இங்கே வந்தாள்?

அந்தப் பெண் மயக்கமுற்றுத் தரையில் சாய்ந்தாள். தளபதி சந்தேகத்துடன் அருகில் சென்று பார்த்தான்.

அவள் கை விரல்களில் அணிந்திருந்த மோதிரத்தைக் கண்டதும், அவன் தணுக்குற்றான்! மஞ்சுளாவுக்குக் கொடுத்த மோதிரம்தான் அது! அந்த பெண்-அவள்-மஞ்சுளாதான். இருவரும் மீண்டும் சேர்ந்தனர். அன்றே தளபதி தன் தம்பியையும், மஞ்சுளாவையும் அழைத்துக் கொண்டு சுவேதபுரியை அடைந்தான். மன்னன் அவர்களை வரவேற்றான். தளபதி ரவிசந்திரனின் திறமையால் மீண்டும் செங்கோல் ஆட்சி நடந்தது.

இப்பொழுது ஜயந்திகா தன் தவற்றை உணர்ந்தாள். தளபதியின் விருப்பத்திற்கு மாறாகக் குறுக்கிட விரும்பவில்லை. அந்தத் திடீர் மாறுதல் அவளுக்கே எப்படி வந்ததென அதிசயமாக இருந்தது! வீராங்கனும் ஓர் அரசகுமாரன் என்பதை அறிந்த ஜயந்திகா, அவனையே மணக்க விரும்பினாள். ஒரு சுப முகூர்த்தத்தில் தளபதிக்கும் மஞ்சுளாவிற்கும், வீராங்கனுக்கும் ஜயந்திகாவுக்கும் கல்யாணம் நடந்தது.

அ11792

கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்



எம். என். கோவிந்தராஜன், சேலம்.

பெட்ரோல் ஏற்றிச் செல்லும் லாரி, வண்டிகளில் ஓர் இரும்புச் சங்கிலிபின்னுல் தொங்கி, ரோட்டில் உராய்ந்துகொண்டு போகிறதே, எதற்காக?

பெட்ரோல் லாரியில் உள்ள பெட்ரோல் தொட்டி (Tank) நிறைந்திராமல் இருந்தால், பெட்ரோலுக்கு மேலே உள்ள இடத்தில் பெட்ரோல் ஆவி செறிந்திருக்கும். இது ஒரு தெவிட்டல் (Saturation) நிலை. இப்படி இருக்கும்போது, அங்குள்ள வெப்ப நிலையானது சிறிது தாழ்ந்தாலும் கூட அந்த ஆவியானது எண்ணற்ற நுண்ணிய துளிகளாகச் சுருங்கும். இந்தத் துளிகள் அங்குள்ள ஆவியின்மீது உராயும். அப்போது இந்த உராய்வினுல் மின்சார ஏற்றம் உண்டாகும். இந்த மின்சார ஏற்றம் உலோகத்தால் செய்த தொட்டியின்மீது தாவும். இந்த மின்சார ஏற்றம் அதிகமாக இருந்தால், சில வேளைகளில் மின்சாரப் பொறி உண்டாகலாம். அதனுல் பெட்ரோல் பற்றி எரிந்து வெடித்து, அபாயம் ஏற்படக்கூடும். லாரியில் உள்ள வேறு பகுதியின் உராய்வாலும் இந்த நிலை ஏற்படலாம்.

உன் கேள்வியில் குறிப்பிட்ட இரும்புச் சங்கிலி உலோகத்தால் செய்யப்பட்ட பெட்ரோல் தொட்டியைப் பூமியோடு இணைக்க உதவுகிறது. இந்த இணைப்பு காரணமாகப் பெட்ரோல் தொட்டியில் மின்சார ஏற்றம் திரண்டு சேராது. பூமிக்குத் தப்பி ஓடிவிடும். ஆகவே மின்சாரப் பொறி தெறிக்காது. வெடிப்பும் உண்டாகாது.

—பி. எஸ். வரதராஜன், சேலம்.

வானத்தின் உண்மையான வர்ணம் என்ன? ஏன் நீலமாக இருக்கிறது?

வானத்திற்கு உண்மையாக வர்ணம் கிடையாது. அது கண்ணுல் காணமுடியாதது. ஆனுல் பூமியைச் சுற்றி ஒரு வாயு மண்டலம் இருக்கிறது. வாயுமண்டலத்திலுள்ள வாயுவும் நிறமற்றது; காணமுடியாதது.

வானம் ஏன் நீலநிறமாக இருக்கிறது என்று முன்னுல் ஒரு

முறை சொல்லியாகி விட்டது. இப்போது அதைச் சுருக்கமாக நினைவூட்டுகிறேன். வாயுவிலுள்ள மூலக் கூறுகள் வெண்மையான ஒளியின் நீலநிறக் கிரணங்களை (சிவப்பு, மஞ்சள் முதலிய நிறக் கிரணங்களைவிட) அதிகமாகச் சிதறச் செய்வதால் வானம் நீலநிறம் உள்ளதுபோல் தோன்றுகிறது.

ஆர். கருணேஸ்வரி, திருச்சி.

பூமி சுற்றுவது நம் கண்ணுக்குத் தெரியவில்லையே, ஏன்?

நீ ஒரு ஸ்டேஷனின் பிளாட்பாரத்துக்கு அருகில் நிற்கும் ஒரு ரெயிலில் உட்கார்ந்திருப்பதாக வைத்துக்கொள். உன் ரெயிலுக்குப் பக்கத்தில் மற்றொரு ரெயிலும் இருக்கிறது என்றும், நீ இருக்கும் வண்டியில் பிளாட்பாரப் பக்கத்திலுள்ள ஜன்னல்கள் எல்லாம் சாத்தியிருப்பதாகவும் வைத்துக் கொள்.

அப்போது நீ உள்ள ரெயில் மெதுவாகவும் ஓசை இல்லாமலும் போகத் தொடங்கினால், பக்கத்தில் நிற்கும் ரெயிலை மட்டும் நீ பார்த்தால், அது போய்க்கொண்டிருப்பதுபோலும், உன் ரெயில் அசையாதிருப்பதுபோலும் தோன்றுகிறது அல்லவா? போவது, அதாவது உன்னுடைய ரெயில் இயக்கம், உனக்கு ஏன் தெரிவதில்லை?

'சார்பு நேர் வேகத்தை' மட்டுமே நாம் உணர முடியும் என்று ஐன்ஸ்டைன் நிரூபித்திருக்கிறார். நீ உட்கார்ந்திருக்கும் ரெயில் இயங்கும்போது, உனக்கு யாதொரு சார்பு நேர் வேகமும் இல்லை. அந்த ரெயிலும் நீயும் ஒன்றாகவே இயங்குவதால் அதன் இயக்கம் உனக்குத் தெரிவதில்லை.

பூமி சுழலும்போதும், இப்படித்தான் நடக்கிறது. ஆகையால் முன்காலத்தில் வாழ்ந்தவர்கள் பூமி அசையாமல் நிலையாக இருக்கிறது என்றும் நக்ஷத்திரங்களெல்லாம் அதைச் சுற்றி ஓடி வந்தன என்றும் எண்ணினார்கள்.

ஏ. பாலகிருஷ்ணன், சேலம்.

பூமிக்கு எத்தனை மைல் வரையில் ஆகர்ஷண சக்தி உண்டு? அதற்குமேல் ஒரு பொருள் சென்றுவிட்டால் அது எந்தப் பக்கம் செல்லும்?

ஒரு பொருளானது பூமியை விட்டு எட்டிப் போகப்போக, பூமியின் கவர்ச்சியானது அதன் மீது உறைப்பது குறைந்து வருகிறது; ஒரு பொருளை நேர் வேகத்தோடு உயரப் பார்த்து வீசி எறிந்தால், அது ஓர் உயரம் வரை செல்லும். பின்பு மறுபடியும் கீழே விழுந்து விடும்.

அந்த நேர் வேகமானது இதைவிட அதிகமாக, (ஓர் குறிப்பிட்ட அளவைவிட அதிகமாக) இருந்தால் அது மீண்டும் கீழே விழாது. அது பூமியைச் சுற்றி நீள் வளைய வடிவமான பாதையில் சுற்றிக் கொண்டேயிருக்கும்.

இந்த நேர் வேகமானது இந்த அளவையும் விட அதிகமான மற்றொரு குறிப்புக்கு மேற்பட்டால் அந்தப் பொருளானது செல்லும் பாதை அதைப் பூமியிலிருந்து மேன்மேலும் அப்பால் செல்லச் செய்யும்.

போதுமான அளவுள்ள ஒரு பெருந் தூரத்துக்கு அப்பால் அப் பொருளானது ஒரு சீரான நேர் கோட்டுப் பாதையில் ஒரே சீராகச் சென்று கொண்டேயிருக்கும்.

டி. காமாக்ஷி, சென்னை.

ஹார்ஸ்-பவர் (குதிரைச் சக்தி) என்றால் என்ன?

ஒரு பவுண்டு எடையுள்ள பொருளை ஓர் அடி உயரம் செங்குத்தாகத் தூக்கினால் அப்போது செய்யப்படும் வேலைக்கு ஓர் அடி-பவுண்டு என்று பெயர். 550 பவுண்டு எடையுள்ள ஒரு பொருளை ஓர் அடி உயரம் செங்குத்தாக உயரத் தூக்கினால், அப்போது செய்யப்பட்ட வேலை 550 அடி-பவுண்டு எனப்படும்.

இந்த வேலையானது நொடியில் செய்யப்படுமானால், வேலை வீதம் நொடிக்கு 550 அடி-பவுண்டு ஆகும். இந்த வேலை வீதத்துக்குத் தான் ஹார்ஸ்-பவர் (குதிரைச் சக்தி) என்று பெயர்.

ஏ. அப்துல் பாரி, நீடூர்.

என் நண்பன் இரவில் தூங்கும் போது தன்னாலேயே பேசுகிறான். எழுந்து பகலில் முடிக்காத வேலையைச் செய்கிறான். இது எதனால் உண்டாகிறது?

நம்முடைய இயக்கங்களையும் செயல்களையும் அடக்கி ஆளும் மனமானது (நரம்பு மண்டலமானது) இரண்டு பிரிவாக அமைந்துள்ளது. ஒரு பிரிவு நாம் தெரிந்து செய்யும் காரியங்களை எல்லாம் மேற்பார்க்கிறது. மற்றொன்று நாம் நம்மை அறியாமலே செய்யும் காரியங்களைச் செய்து வருகிறது. நம்மை அறியாமலே நாம் எத்தனை காரியங்களைச் செய்து வருகிறோம். உதாரணமாக நாம் மூச்சு விடுவதைப் பற்றி நினைப்பதில்லை. ஆனால் ஓயாமல் மூச்சுவிட்டுக் கொண்டே இருக்கிறோம். நெஞ்சு துடிப்பதும் இவ்வாறே. இதைத் தவிர நாம் நினைத்துச் செய்யும் காரியங்களில் சிலவும், செய்து பழகிய பயிற்சியால் கிட்டத்தட்ட நம்மை அறியாமலே நடந்து வருகின்றன. உதாரணம்: நடத்தல்.

இந்த இரண்டாவது வகையான காரணங்களைச் சிலர் விழித்துள்ளபோது செய்வது போலவே தூங்கும்போதும் செய்கிறார்கள். மனமானது இந்தக் காரியங்களை மேற்பார்த்துப் பார்த்துப் பழகிப் போய்விட்டபடியால், அவற்றை நினைவோடு மேற்பார்க்க வேண்டிய அவசியம் இருப்பதில்லை. ஆகையால் நாமும் அச்செயலைச் செய்கிறோம் என்று உணர்ந்திருக்க வேண்டியதில்லை.

சிலர் தூங்கும்போது நடக்கிறார்கள். ஏனென்றால் அவர்களுடைய மனத்தின் ஒரு பகுதி உறங்கும் போதும், மற்றொரு பகுதி விழித்திருக்கிறது. இதில் ஒரு விசேஷம் என்னவென்றால் விழித்திருக்கும் போது நடக்க அஞ்சும், தலை கிறுகிறுக்கும் இடங்களிலும்கூட உறங்குபவன் கவலையில்லாமல் சாவதானமாக நடக்கிறான்.

இதைப் போலவே பேசுவதும் வேறு சில காரியங்களைச் செய்வதும் அவ்வேளைகளில் உடலின் மற்ற எல்லாப் பகுதிகளும் அமைதியாயிருப்பதால் அவன் உறக்கத்தில் செய்யும் காரியங்கள் விழிப்பில் செய்யும் காரியங்களைவிட நன்றாக நடைபெறுகின்றன.

ஆடிய படம்

ஜ. சாமிநாதன்



"டேய், சரியா அடியேண்டா! உம்.. அப்பாடி. ஒரு வழியா 'ரெட்'டைப் போட்டியா? சரி, 'பாலோ ஆனே'யும் போட்டுடு" என்று ராமு, கிருஷ்ணனை அவசரப் படுத்தினான்.

ராமுவும் கிருஷ்ணனும் ஒரு கட்சியாகவும், மணியும் கோபுவும் எதிர்க் கட்சியாகவும் 'கேரம் போர்டு' விளையாடிக்கொண்டிருந்தனர். காலை பதினொரு மணிக்கு ஆரம்பித்த ஆட்டம் மத்தியான்னம் மூன்று மணி ஆகியும் முடியவில்லை. எல்லோரும் கிருஷ்ணன் வீட்டு மாடியில் விளையாடிக்கொண்டிருந்தனர். ராமுவுக்கு மணி மூன்று ஆனவுடன் வீடடு ஞாபகம் வந்தது. 'ஆட்டமு'ம் முடிந்து விட்டது. உடனே ராமு, 'டேய் கிருஷ்ணா! நான் போய்விட்டு வரேண்டா. வயிற்றைப் பசிக்கிறது" என்று கிருஷ்ணனிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

"சரிடா. நாம் விளையாடலாம். அவன் போனால் போகட்டும்" என்றான், கிருஷ்ணன்.

ராமு, கிருஷ்ணன் வீட்டு மாடியிலிருந்து இறங்கிக் கீழே வந்தான். கீழே ஒருவரும் இல்லை. கிருஷ்ணனின் அம்மா உள்ளே வேலையாக இருந்தாள்.

கீழே கூடத்திலே ஒரு 'டென்னிஸ்' பந்து கிடந்தது. ராமு அதைப் பார்த்துக்கொண்டே போனான். திடீரென்று அவனுக்கு ஒரு கெட்ட எண்ணம் தோன்றிற்று. சுற்றுமுற்றும்பார்த்தான்; யாரையும் காணோம். உடனே கீழே கிடந்த பந்தை எடுத்து, நிஜார்ப் பையில் திணித்துக் கொண்டு, வீட்டை நோக்கி ஓடினான்.

ராமு இவ்வளவு துணிந்து இந்தக் காரியத்தைச் செய்துவிட்டானே தவிர, அவன் மனம் 'திக் திக்' என்று அடித்துக் கொண்டே இருந்தது. "ஏண்டா, அவ்வளவு வேகமாய் ஓடிவரே?" என்று வாசற்படியில் நின்று

கொண்டிருந்த ராமுவின் தாய் கேட்டாள்.

"என்ன?..ஆ..அதுவா..அது" என்று ராமு ஏதேதோ உளறினன். நல்ல வேளையாக "டிபன் சாப்பிட நாழியாயிடுத்தேன்னு ஓடி வறேன்" என்று கூறிச் சாமர்த்தியமாகச் சமாளித்துக் கொண்டான். உள்ளே நுழைந்தானே, இல்லையோ; நேரே மாடிக்குப் போனன்; கொண்டு வந்த பந்தை எங்கே வைப்பது என்று யோசித்தான். சற்றே நிதானத்துடன் இங்கேயும் அங்கேயும் பார்த்தான்; அப்போதுதான் அவனுக்குப் படபடப்பு அடங்கியிருந்தது. உடனே அவனுக்குச் 'சட்'டென்று ஒரு யோசனை தோன்றியது. உடனே கீழே போய் ஸ்டூலை எடுத்துக் கொண்டு வந்தான். அதில் ஏறி மேலே சிறிய கட்டையிலே முட்டுக் கொடுத்து மாட்டப்பட்டிருந்த காந்தி படத்தின் பின்னலே பந்தை ஒளித்து வைத்தான்.

அப்போது அவன் மனம் 'படக் படக்' என்று அடித்துக்கொண்டது. காந்தியின் படத்தைப் பார்க்கும்போது, காந்தி அவன் செயலைப் பார்த்துச் சிரிக்கிற மாதிரி அவனுக்குத் தோன்றியது! மனச்சாட்சி வேறு குத்திக் கொண்டே இருந்தது.

பிறகு டிபன்கூடச் சாப்பிடாமல் மாடியிலேயே படுத்துக் கொண்டிருந்தவன், தூங்க ஆரம்பித்துவிட்டான்.

* * *

"டேய் கிருஷ்ணு! கேரம் போர்டைக் கொண்டு வாடா. விளையாடலாம்" என்று ராமு கிருஷ்ணன் வீட்டிக்குப் போய் அவனைக் கேட்டான்.

"இல்லேடா! வீட்டில் எல்லோரும் வெளியே போகிறர்கள். இன்னிக்கு உங்க வீட்டிலே விளையாடலாம்" என்று கிருஷ்ணன் கூறினன்.

அப்போது அங்கே குமாரும் கோபுவும் வந்தார்கள். ராமு கேரம்போர்டை எடுத்துக் கொள்ள எல்லோரும் ராமு வீட்டுக்குப் புறப்பட்டனர்.

"டேய்! என்னோட பந்து தொலைஞ்சுப் போச்சுடா. எங்கே போச்சுன்னு தெரியவில்லை" என்று கிருஷ்ணன் கோபுவிடம் சொன்னன். ராமுவுக்குத் 'திக்' கென்றது. 'தெரியாத்தனமாக மறந்து போய் அவர்களை வீட்டுக்குக் கூப்பிட்டு விட்டோமே' என்று எண்ணிக்கொண்டான்.

குற்றமுள்ள நெஞ்சல்லவா! அதனல் அவன் தன்னைப் பாது காத்துக்கொள்ள முதலில் பேச ஆரம்பித்தான்.

"எங்கேயும் போயிருக்காதுடா! எங்கேயாவது வீட்டு மூலையிலே கிடக்கும்" என்று கூறினன்.

"என் பந்துலே ஒரு குறி போட்டிருக்கேண்டா; அதை யார் எடுத்திருந்தாலும் நான் கண்டு பிடிச்சு விடுவேண்டா" என்ருன், கிருஷ்ணன்.

எல்லோரும் ராமுவின் வீட்டை அடைந்தனர்.

"டேய்! கீழேயே விளையாடலாண்டா. மேலே வேண்டாம்டா" என்று ராமு கேரம் போர்டைக் கூடத்திலே வைத்துக் கொண்டே சொன்னன்.

'மேலே பந்தை ஒளித்து வைத்திருக்கோமே. யாராவது

பார்த்துவிட்டால் என்ன செய்வது?' என்ற பயம் ராமுவுக்கு.

"இல்லேடா, இங்கே வேண்டாம்; மேலேயே போய் விளையாடுங்கள்; யாரோ வரப்போகிறார்கள்" என்றாள், ராமுவின் தாய்.

வேறு என்ன செய்வது? எல்லோரையும் மேலே அழைத்துக்கொண்டு போனான், ராமு. அவனுக்கோ உள்ளூறப் பயம்.

எல்லோரும் விளையாட ஆரம்பித்தனர். அரைமணி ஆயிற்று.

பலமான காற்று அடிக்க ஆரம்பித்துவிட்டது. உடனே இவர்கள் விளையாடிக்கொண்டிருந்த அறையிலே இருந்த காந்தியின் படம் ஆட ஆரம்பித்துவிட்டது. அதைக் கண்ட ராமுவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. முகம் பேயறைந்தது போல் ஆகிவிட்டது.

"அப்பாடி, என்ன பேய்க் காற்று!" என்றான் கிருஷ்ணன். இருந்தாலும் அவர்கள் விளையாடுவது நிற்கவில்லை. ராமுவோ ஆடிக்கொண்டிருந்த படத்தையே பார்த்துக்கொண்டிருந்தான்.

"படமோ வேகமாக ஆட ஆரம்பித்துவிட்டது. இன்னும் சிறிது அதிகமாக ஆடினால், அதன் பின்னாலே இருக்கிற பந்து கீழே விழுந்துவிடும். பந்தை கிருஷ்ணன் பார்த்தானானால்.." மேலே ராமுவால் சிந்திக்க முடியவில்லை.

படம் இன்னும் வேகமாக ஆட ஆரம்பித்துவிட்டது. ராமுவுக்குப் பேச்சு மூச்செல்லாம் ஒடுங்கிவிட்டது!

கிருஷ்ணன், "டேய்! விளையாடடா. என்னமோ படத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறாயே" என்றான். உடனே ராமு, 'ஏதோ

விளையாடினேம்' என்று விளையாடினன்.

பந்து படத்தின் பின்னலேயிருந்து விழுந்துவிடும் நிலைக்கு வந்து விட்டது. ராமுவுக்கு இதைப் பார்த்தவுடன் அழுகையே வந்துவிட்டது. மெதுவாக வேறு திசையில் முகத்தைத் திருப்பி, கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். பிறகு காந்தியின் படத்தைப் பார்த்தான். அது ஆடி, ஆடி ராமுவைப் பார்த்து மன்னிப்புக் கேட்கும்படி சொல்வது போல் அவனுக்குத் தோன்றியது. உடனே அவன் மனம் "மகானே! என்னுடைய செயல்களையெல்லாம் நீ கவனித்துக்கொண்டு வந்திருக்கிருய். என் குற்றத்தை மறந்துவிடு. என் மானத்தைக் காப்பாற்று" என்று மன்னிப்புக் கோரியது.

அவன் கண்களிலிருந்து இன்னும் இரண்டு சொட்டுக் கண்ணீர் வந்தது.

"டேய்! பார்த்துப் போடடா, அந்த வெள்ளையை. ராமுதான் நன்ருகவே விளையாட மாட்டேங்கிருன். நீயாவது நன்ருய் விளையாடு" என்ருன், குமாரைப் பார்த்து கிருஷ்ணன்.

இதை ராமுவோ கவனிக்கவே இல்லை. அவன் தான் தன் குற்றத்துக்குக் காந்தியிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டிருக்கிருனே! உடனே ஆச்சரியப்படும் வகையில் அவன் மன்னிப்புக்குப் பலன் கிடைத்து விட்டது போலிருந்தது!

வேகமாகக் காற்று அடித்தும் பந்து கீழே விழாமல் இருந்தது. சற்றைக்கெல்லாம் காற்றும் நின்றது.

அப்போதுதான் ராமுவுக்கு நிம்மதி உண்டாயிற்று. உடனே ராமு காந்தியின் படத்தை நன்றி மிகுந்த கண்களுடன் பார்த்தான். காந்தி அமைதியுடன் நல்வழியைப் போதிப்பதுபோல் தோன்றியது. ஆட்டமும் முடிந்தது.

"டேய் ராமு! போய்விட்டு வரேம்டா" என்று கூறி எல்லோரும் சென்று விட்டார்கள்.

* * *

"டேய் ராமு! என்னடா டிபன் சாப்பிடக் கூப்பிட்டேன், வரவே இல்லை. எங்கே போய்ட்டு வந்தே? உடனே படுத்துண்டுட்டே" என்று கூறிக் கொண்டே ராமுவின் தாயார் மாடிக்கு வந்து, ராமுவை எழுப்பினள்.

"ஆ! உம்...சரி....போட்டுடறேன்" என்று உளறிக் கொண்டே எழுந்தான்.

உடனே மனநிம்மதியுடன் டிபன் சாப்பிட்டு விட்டு மாடிக்குச் சென்ருன். காந்தியின் படத்துக்குப் பின்னலே இருந்த பந்தை எடுத்துப் பையில் வைத்துக் கொண்டு கிருஷ்ணன் வீட்டுக்குச் சென்ருன். கிருஷ்ணன் வீடு பூட்டியிருந்தது. உடனே பந்தை அவர்கள் வீட்டு ஜன்னல் வழியாகப் போட்டான். அப்போது ஜன்னல் வழியாகத் தெரிந்த காந்தியின் படம் ராமுவைப் பார்த்துச் சிரிப்பதுபோல் தோன்றியது.

கதை: ஆர்வி

தூங்கும் அழகி

சித்திர ஸாமி

(தொடரும்)

சந்திரகிரிக் கோட்டை

"ஜனு"

கண்ணாடி மாளிகையில் கலங்கிப் போய் நின்றான் அமலன். எந்தத் திசையில் திரும்பினாலும் அந்தத் திசையில் நூற்றுக்கணக்கான அமலன்கள்! அருகில் ஓர் அமலன்! அதோ அந்தக் கோடியில் ஓர் அமலன் நிற்கிறான். அவனுக்கு எதிரில் அவனோடு பேசுவதுபோல மற்றோர் அமலன் நிற்கிறான். எத்தனை தடவைதான் ஏமாறுவது? தன்னைத் தவிர வேறு யாராவது வந்திருக்கிறார்களா என்று திரும்புவோம் என்றால் ஆயிரம் முகங்கள் திரும்புகின்றன. ஆயிரம் முகங்கள் எதிரே தலையைக் காட்டி மறைக்கின்றன. ஒரே பிரமை! எங்கே எப்படி அடி எடுத்து வைப்பது என்றே தெரியவில்லை. 'சரி; வந்த வழியே போய் வேறு பாதை இருக்கிறதா என்று பார்க்கலாம்' எனத் திட்டி வாசலைப் பார்த்தான். அவனோடு கூடவே ஆயிரம் முகங்களும் பார்த்தன. இந்த முயற்சி இப்படியே ஆயிரம் தடவையும் வீணாயின. இவை என்ன, வெறும் கண்ணாடிகள்தானா, அல்லது மாயா ஜாலம் காட்டுபவைகளா? ஆயிரக் கணக்கான அமலன்கள் மத்தியில் நிஜ அமலன் யார், பிம்பமாக இருக்கும் அமலன் யார்? அமலன் கண்களை மூடிக்கொண்டு, தன்னையே ஒரு தடவை கிள்ளிப் பார்த்துக் கொண்டான். அதற்குப் பிறகு கண்களைத் திறந்தால் மறுபடியும் ஆயிரம் பேரும் கண்களைத் திறக்கிறார்களே! அட, கஷ்டமே!

அமலன் சுற்றிச் சுற்றி வந்தான். வந்து என்ன பயன்? அத்தனை பிம்பங்களும் சுற்றிச் சுற்றியே வந்தன.

'சரி; எப்படியாவது வெளியேற வேண்டுமே-ஏதாவது ஒரு முயற்சி செய்துதானே பார்க்க வேண்டும்.. அதோ ஒரு வழி இருப்பதுபோல் தெரிகிறதே!' என்று எண்ணிக் கொஞ்சதூரம் நடந்தான்.

''டங்....'' - சற்றுத்தூரம் போனதுமே தலைதான் கண்ணாடியில் பலமாக முட்டிக்கொண்டது. திரும்பினான்; எதிர்ப்புறம் வேறு ஒரு வாசல் தெரிந்தது. ''சரி, அதோ ஒரு வாசல்!'' என்று அந்தப் பக்கத்தில் சென்றான். மறுபடியும், ''டங்'' என்று முட்டிக்கொண்டான். ''டங் டங் டங்....''

நேரமோ போய்க்கொண்டிருந்தது. பல பல முயற்சிகள் செய்தும் அந்த இடத்தைவிட்டு வெளியேறும் வழியே ஏற்படவில்லை. 'பேஷ், பேஷ்! இந்த இடத்திலேயே விழித்துக்கொண்டு நிற்க வேண்டியதுதான்!' என்ற கவலையோடு அமலன் அலமலங்க விழித்துக்கொண்டு நின்ருன்.

'யாரையாவது கூப்பிட்டுப் பார்ப்போம்' என்ற எண்ணம் தோன்றியது. ''ஏ, தும்பிராஜா! ஏ, தும்பிராஜா!'' என்று உரக்க அழைத்தான். அவனுடைய பிம்பங்கள் எல்லாம் அவனுக்கு அழகு காட்டுவதுபோல வாயை வாயைப் பிளந்தன. அதைத் தவிர அவனுடைய அழைப்புக்கு வேறு எந்தப் பலனும் ஏற்படவில்லை. அங்கே தும்பியும் வரவில்லை; ராஜாவும் வரவில்லை.

எரிச்சல் தாங்கமாட்டாமல் அவன் ஒரேயடியாக ஊளையிட்டான். அவமானம் தாளமாட்டாமல் லஸ்தர் விளக்குகள்மீது பாய்ந்து தொங்கினன். ஏற்பட்ட பலன் என்ன? அவனுடைய பிம்பங்கள் எல்லாம் திரும்பத் திரும்ப அவனையே ஏமாற்றிப் பரிகசித்தன.

இந்த அழகான நிலையில் அரண்மனைச் சிப்பந்திகள் யாராவது ஒளிந்திருந்து தன் கேவலமான செயல்களைக் கவனிக்கப் போகிருர்களே என்ற கவலை வேறு அவனை வாட்டியது.

வேறு ஒரு யோசனை உதித்தது. ஓர் இடத்தில் கண்ணுடியைப் பிடித்துக்கொண்டு அதன் மூலம் நெடுகப் போய்ப் பார்த்துவிடலாம் என்பதே அந்த யோசனை. அப்படியும் பார்த்தான். கண்ணுடிகள் கொஞ்சமாவது அசைந்துகொடுக்கவேண்டுமே!

'சரி.. நிலத்தின் வழியாகச் சுரங்கப் பாதை ஏதேனும் இருக்குமோ?' என்று ஓர் இக்குணி இடம் விடாமல் அந்தத் தேக்குமரத் தரையை ஓங்கி ஓங்கி மிதித்தான். எல்லா இடங்களுமே 'தொம் தொம்' என்றுதான் சத்தம் கேட்டன.

எந்த இடம் என்று சந்தேகப்பட்டுப் பார்ப்பது?

கிருஷ்ண பகவான் ஒரு சமயம் ருக்மிணியோடு சதுரங்கம் விளையாடிக்கொண்டிருந்தாராம். ''கிருஷ்ணு, கிருஷ்ணு!'' என்ற அபயக் குரல்கள் கேட்டனவாம். துரியோதனன் சபையில் பாஞ்சாலி போட்ட கூச்சல்தான் அது. ருக்மிணி, பகவானைப் பார்த்து, ''பிரபோ! உங்கள் சகோதரி அபயக்குரல் கொடுக்கிருளே! உங்கள் காதில் விழவில்லையா?'' என்று கேட்டாளாம். கிருஷ்ண பகவான் ஒன்றையும் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. கடைசியாக, ''கிருஷ்ணு! நீதான் கதி!'' என்ற சத்தம் வந்ததுமே ''அக்ஷயம்'' என்ருர். பாஞ்சாலியின் மானத்தைக் காக்க அவளுடைய ஆடை அக்ஷயமாய் வளர்ந்துகொண்டே போயிற்ரும். இதில் விசேஷம் என்னவென்ருல், ''கிருஷ்ணு, கிருஷ்ணு!'' என்று கூப்பிட்டபோதெல்லாம், பாஞ்சாலி தன் கையால் தன் ஆடையை இறுகப் பிடித்துக்கொண்டு இருந்திருக்கிருள். கிருஷ்ணன் உதவி அப்போது கிடைத்திருந்தால், பாஞ்சாலிக்கு அது பகவானுடைய அருள் என்பது தெரியுமா?' தான் ஆடையைப் பற்றிக்கொண்டு இருக்கிரேம்; அதனுல் மானம் தப்பியது' என்றுதானே எண்ணுவாள்? அதை எண்ணியே பகவான் பேசாமல் இருந்திருக்கிருர். கடைசியில் ஏன் போனுர் என்ருல் அவள், 'இனி தன்னுல் ஒன்றும் ஆகாது' என்று இரு கைகளையும் தூக்கி, ''ஏ மாதவா, கிருஷ்ணு! நீதான் கதி'' என்று கத்தியிருக்கிருள். பகவான் உடனே அவளுக்கு உதவி செய்ய வந்துவிட்டார். இந்தக்

கதைதான் அமலனுக்கு அப்போது ஞாபகம் வந்தது. தன் புத்தி, யுக்தி, சக்தி மூன்றையும் உபயோகப்படுத்திப் பார்த்துவிட்டான். இனி வேறு வழி ஒன்றும் அவனுக்குத் தோன்றவில்லை. ஆகவே அவன் இடையிலிருந்த வாளை உருவி, ''ஏ பகவானே! நீதான் எனக்கும் கதி!'' என்று எதிரே தெரிந்த ஒரு கண்ணாடிமீது ஓங்கி வீசினான்.

என்ன ஆச்சரியம்! ஆண்டவன் அருள் பாலித்துவிட்டதாகவே தோன்றியது. கண்ணாடி தூள் தூளாகச் சிதறி, நொறுங்கி விழுந்தது. அதே சமயத்தில் பின்னால் இருந்த மரச் சட்டம் படக்கென்று திறந்துகொண்டு விட்டது. அதன் வழியே பார்த்தபோது வேறு ஓர் அழகான மஹல் தெரிந்தது. வாசலும் தெரிந்தது. இந்தக் கண்ணாடிதான் அந்த வாசலின் சூட்சுமக் கதவு என்பதும் தெரிந்தது. இது முன்னமே தெரிந்திருந்தால் இந்த அருமையான கண்ணாடியை உடைத்திருக்கவே வேண்டாம் என்றுகூட அமலனுக்குத் தோன்றியது.

ஆபத்தான இந்தத் தருணத்தில் தனக்குக் கருணை காட்டிய இறைவனை வாழ்த்தியவாறே அமலன் அந்த அழகிய மஹலுக்குள் அடி எடுத்து வைத்தான். அவன் பின்னாலேயே அந்தச் சட்டம் கப்பென்று மூடிக்கொண்டுவிட்டது.

அந்த மஹல்தான் என்ன அற்புமாக இருந்தது! எட்டு கோணமாக அமைந்த அந்த மஹலுக்குள் எட்டுக் கோணங்களிலும் சுற்றிச் சுற்றிச் செல்லும் படிக்கட்டுகள் இருந்தன. எந்தப் படிக்கட்டு எங்கே கொண்டு போய்விடும் என்பது சற்றும் புலப்படவில்லை. ஒவ்வொரு படிக்கட்டின் படியிலும் ஒவ்வொரு பதுமை வைக்கப்பட்டிருந்தது.

இதையெல்லாம் பார்த்து அமலன் அதிசயமடைந்தான். இவ்வளவு அழகான அரண்மனை எந்த நாட்டிலுமே இருக்காது என்று அவனுக்குப் பட்டது. சாதாரணமான ஒரு சிற்றரசர் மாளிகையில் இத்தனை சிறப்புகளா?

அமலன் மனத்தில் ஒருவகைத் தைரியம் ஏற்பட்டு விட்டது. தெய்வத்தின் அநுக்கிரகம் தன் பங்கில் இருப்பதாகவே அவன் எண்ணினான். இல்லாவிட்டால் அந்தக் கண்ணாடி மாளிகையிலிருந்து அவன் எப்படி வெளிப்பட்டிருக்க முடியும்? தெய்வத்தின்மீது பாரத்தைப்

போட்டுவிட்டு, ''ஈசா, நீதான் எனக்குத் துணை!'' என்று பலமுறை எண்ணமிட்டபடியே ஒரு படிக்கட்டில் காலை எடுத்து வைத்தான்.

அடுத்த கணம், மின்வெட்டு நேரத்தில் சிலையின் வலது கரம் சரக்கென்று நீண்டு அவன் வழியை மறித்தது. அமலன் வெலவெலத்துப் போனான். அவனுடைய வீர பராக்கிரமங்கள் எல்லாம் இந்த இடத்தில் எங்கேயோ போய்ப் பதுங்கிக்கொள்ளத் தொடங்கின.

அமானுஷ்யமான ஒரு சக்தியுடன் போட்டியிடுவது போலவே அவன் உணர்ந்தான். பதுமையின் கரங்களைத் தொடவே அவனுக்கு யோசனையாக இருந்தது. ஒன்று கிடக்க ஒன்றில் போய் மாட்டிக் கொண்டால், அதிலிருந்து மீண்டு வர அவகாசம் எங்கே இருக்கிறது? எனவே பேசாமல் திரும்பி வேறு ஒரு படிக்கட்டில் ஏறப் போனான். அங்கிருந்த பதுமை, பதுமையாகவே நின்றது. ஒன்றும் தடுக்கவோ, தள்ளவோ இல்லை. அமலன் தைரியமடைந்து, உருவிய வாளுடன் ஒவ்வொரு படியாக ஏறி மேலே மேலே போனான். பதினைந்து அடி உயரத்திலேயே மேல் தளம் இருந்தது. ஆனால் இருளடர்ந்து கிடந்தது. படிகளில் அவன் வெகு நிதானமாகத்தான் ஏற வேண்டியிருந்தது. சுற்றிச் சுற்றிச் செல்லும் அந்தப் படிகள் எங்கே, எப்படி வளைந்து செல்கின்றன என்பது தெளிவாக இல்லை. எங்கிருந்தோ குளிர்ந்த காற்று மட்டும் வீசிக்கொண்டிருந்தது. வெகு நேரம் இவ்விதம் அவன் சென்றபிறகு படிக்கட்டுகள் அவனை ஒரு வட்டமான பாதையில் கொண்டுபோய்ச் சேர்த்தன. அங்கே வெளிச்சமாய் இருந்தது. பாதையின் இருபுறமும் கருங்கல் பாறையைக் குடைந்தது போன்றிருந்தது. அந்தப் பாதையை அவன் சுற்றி வருகையில் வேறு ஒரு வாசல் தென்படவே அதனுள் நுழைந்தான்.

அங்கே மீண்டும் இருள் நிறைந்திருப்பதைக் கண்டு அமலன் வெகு நிதானமாக அடி எடுத்து

வைக்கலானுன்? அந்த இருட் குகையும் படிக்கட்டுகளால் ஆனது என்பது உடனே தெரிந்தது. படிக் கட்டுகள் கீழ்த்திசையில் சென்றன. எப்படியானுல் என்ன? திருப்பதி மலையில் ஏறி இறங்குவதைப்போல் அந்த எட்டுக் கோண மஹலை விட்டு அடுத்த இடம் போனுல் சரிதான் என்று இறங்கிப் போய்க்கொண் டிருந்தான்.

இவ்விதம் அரைநாழிகை நேரம் சென்றபின் பார்த்தால் பழையபடி அந்த மஹலுக்குள்ளேயே வேறு ஒரு படிக்கட்டு வழியாக இறங்கி வருவதை உணர்ந்தான். "அட கடவுளே! மறுபடியும் சோதனையா?" என்று எண்ணி, ஏங்கிச் சோர்ந்தது அவன் உள்ளம். எல்லாப் படிக்கட்டுகளுமே அவனை ஏமாற்றித் திரும்பத் திரும்ப அவனை அலையவைப்பதற்காகவே காத்திருந்தன போலிருந்தது.

"சரி; முயற்சி செய்வது நமது கடமை; வெற்றி பெறுவது இறைவன் ஆணை" என்று சொல்லிக் கொண்டு மூன்ருவது போக நாலாவது படிகளில் ஏறத் தொடங்கினுன். ஒரு நாழிகை நேரம் இருளிலேயே படிக்கட்டுகளில் ஏறுவதும் இறங்குவதுமாய் இருந்துவிட்டுக் கடைசியில் ஐந்தாவது படிக் கட்டுக்கே வந்து சேர்ந்திருப்பதைக் கண்டான். அவனுக்குக் கவலையினுல் மூச்சு வாங்கியது. அந்த மஹலிலிருந்து வெளியே போக வேறு வழியும் இல்லை. முயற்சியையும் நிறுத்த முடியவில்லை. தன்னுடைய சாகஸத்தை யெல்லாம் ஒன்று சேர்த்துக்கொண்டு அவன் ஆருவது படிக்கட்டில் ஏறினுன்.

'முக்காலே மூன்று தடவை ஆகிறதால் இந்தத் தடவை கட்டாயம் வேறு ஒருவழி தென்படும்; வெற்றிப் பாதையில் சென்றுவிடலாம்' என்ற நம்பிக்கையே அவனுக்குப் புதுப்பலம் அளித்தது.

தாய்: உம்! சாதம் ஊட்ட வாயைத் திறக்க மாட்டேங்கறியே! கார் 'ஆ'ன்னு வாயைத் திறந்திண்டிருக்கு. அப்புறம் அதன் வாயில் போட்டு விடுவேன்.

—சுண்டு

நடந்தான், நடந்தான்; ஏறினுன், இறங்கினுன்; ஏறியேறி இறங்கினுன். கடைசியில்,—

அவன் வந்து நின்ற இடம் ஏழாவது படிக்கட்டில்தான். இந்த ஏமாற்றத்தைக் கண்டு எங்கே போய் முட்டிக்கொள்வது?

அமலனுடைய மனநிலையை இப்போது ஊகிப்பது என்பது சிறிதும் சாத்தியமில்லை. வெற்றியின் இன்பப் பாதையிலே விமலன் குதித்துக் கொண்டு செல்வதுபோல அவன் கற்பனை செய்துகொண்டான். அந்தக் கற்பனையே அவன் மண்டையைப் பிளப்பதுபோல இருந்தது.

கண்ணுடி மாளிகையில் பட்ட அவதியைப்போல் பன்மடங்கு வேதனை மூண்டெழுந்தது. வெற்றியோ தோல்வியோ, கலங்கி மயங்கி நிற்க அதுவா நேரம்? ஆண்டவனை நினைத்து முதலில் ஏறிய எட்டாவது படிக்கட்டில் ஏறிவிடுவது என்று அவன் துணிந்து விட்டான். (தொடரும்)

எங்கள் பகுதி

*விமரிசனத்துக்கு விமரிசனம்

'எங்கள் பகுதி'யில் எழுதும் சகோதர சகோதரிகளே! வணக்கம்.

நீங்கள் விமரிசனம் செய்கிறீர்களே, அதற்கு ஒரு விமரிசனம் வேண்டாமா? அதைத்தான் நான் இதோ எழுதியிருக்கிறேன். 'லீடர் மணி நன்றாயிருக்கிறது. தூங்கும் அழகி ஜோர். சந்திரகிரிக் கோட்டைக்கு ஒரு சபாஷ்!'—இப்படியெல்லாம் எழுதிவிட்டால் இது விமரிசனம் ஆகுமா? உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்கிறீர்கள். அவ்வளவுதானே! இதையே பரிசு பெற்ற சிலர் புதுப் புது வகையாக எழுதுகிறார்கள். நான் எப்படி இருக்க வேண்டும் என்று சொல்கிறேன், தெரியுமா? எங்கள் பகுதியை இரண்டாகப் பிரித்துக்கொள்ளுங்கள். முதல் பிரிவில் நல்ல விஷயங்களையும் பயனில்லாத விஷயங்களையும் ஒளிவு மறைவு இல்லாமல் எழுதுங்கள். ஆசிரியர்தான் நாம் எதைப் பாராட்டி எழுதினாலும், கண்டித்து எழுதினாலும் வஞ்சனையின்றிப் பிரசுரிக்கிறாரே! அப்புறம் நமக்கு என்ன கவலை?

அடுத்த பிரிவில் உங்களுக்குப் பிடித்த ஒரு கதையை விரிவாக விமரிசனம் செய்யுங்கள். பிடித்த கதை என்பதற்குள்ள காரணங்கள், எது பிடித்தது, அதில் என்ன உயர்ந்த அம்சம் இதையெல்லாம் சக்கைப் போடாகப் போடுங்கள். இல்லையானால் பிடிக்காத கதை ஒன்றை எடுத்துக்கொண்டு கொலை பண்ணுங்கள். இதனால் நமக்கும் வளர்ச்சியுண்டு. எழுதியவர்களுக்கும் வளர்ச்சியுண்டு.

சரிதானா, என் யோசனை? சரியில்லாவிட்டால் நீங்கள் இதற்கே ஒரு விமரிசனம் எழுதலாமே!

—பி. எஸ். வஸந்தா,
சைதாப்பேட்டை.

* பரிசுபெற்ற கடிதம்.

'சதுர்த்தி மலர்'

விநாயக சதுர்த்தியை விளக்கும் வண்ணம் அமைந்துள்ள 1-9-54 கண்ணன் அட்டைப் படம் நன்றாயிருக்கிறது. 'கேட்டீர்களா' பகுதியிலுள்ள ஆறு செய்திகளும் அறிந்து கொள்ளத்

211792

தக்கவையே. உயர்ந்த சேமியாத் துணுக்கு உயர்ந்த ஒன்று. பரிசு பெற்ற வீர விஜயன் கதை சோர்த்தியாயில்லை. எழுதிய நண்பர் பாட்டி கதைக்குப் புது மெருகு தீட்டியுள்ளார். இது போன்ற கதைகள் பல பல ரூபத்தில் வெளிவந்து விட்டன. என்றாலும் தரம் குறையவில்லை. 'லீடர் மணி' கதைகளுக்கெல்லாம் லீடராகத் தான் உள்ளது. 'காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல்' துடுக்குத்தனமும் சில சமயம் பலனளிக்கும் என்று நீலம் கூறுவது உண்மையே. ஆனால் துடுக்குத்தனம் அதிகமானால் ஆபத்தும் அதிகம் என்பதை இக்கதை விளக்குகிறது. எங்கள் பகுதி விமரிசனங்கள் இரண்டும் பொருத்தமாகவே உள்ளன. "தினை விதைத்தவன் தினையறுப்பான், வினை விதைத்தவன் வினையறுப்பான்" என்பது போல் அமைந்துள்ள "உழைத்த பணம்" நல்ல கதை. பயனுள்ளதும் கூட. "அன்பு" கதையும் போற்றும்படியேயுள்ளது. தன் உயிரையே லட்சியம் செய்யாது, தன் நண்பனை மணி காப்பாற்றியதும், கண்ணனின் தந்தை மனம் மாறியதும் உருக்கமாயுள்ளன. ஆர்வியும் ஸாமியும் சேர்ந்து எங்களுக்குக் கொடுக்கும் சித்திரத்தொடர் கதை விருந்து ருசியாயிருக்கிறது. இன்னும் இது போன்ற விருந்துகளும் எங்களுக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டும். "பேராசிரியர் விஞ்ஞானம்" அவர்களின் விடைகள் விளக்கமாகவும் பயனுள்ளதாகவும் உள்ளன. "சங்கிரகிரிக் கோட்டை" கண்ணனின் தரத்தை மேலும் ஒரு படி உயர்த்தியிருக்கிறது, "வெற்றியும் தோல்வியும் வீரர்க்குச் சகஜம்" என்பதை அமலனும் விமலனும் கடைப்பிடித்துவருதல் குறிப்பிடத்தக்கது. உலகமே கண்டு பிரமிக்கும்படி நாங்கள் முன்னேறவும், "ரெய்னக்" போல நாங்களும் ஸாகஸங்கள் பல புரியவும் தூண்டுகோலாயுள்ள இந்தப் பேட்டியை வெளியிட்டமைக்கு என் மனமார்ந்த நன்றி.

- P. ஆசீர்வாதம், கோயம்புத்தூர்.

பாராட்டுக் கடிதங்கள்

(1) எம். என். புருஷோத்தமன், சேலம். (2) டி. ராஜலக்ஷ்மி, மயிலாப்பூர். (3) செ. ஐயாசாமி, பணகுடி. (4) எம். பழனிசாமி, பெங்களூர்-3. (5) வி. எஸ். கிருஷ்ணமூர்த்தி, புரசவாக்கம். (6) எஸ். விசுவநாதன், சேலம். (7) அரு. சொக்கலிங்கம், கொத்தமங்கலம். (8) வி. ஆர். தேவராஜுலு, வெண்ணமடை. (9) எஸ். வி. ராமமூர்த்தி, தூத்துக்குடி. (10) எஸ். சார்லஸ், கண்டனூர். (11) வி. சித்ரா, விழுப்புரம். (12) ஆர். ஜலஜா, நாமக்கல். (13) டி. ராஜேஸ்வரி, சிந்தாதிரிப்பேட்டை.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் கிளைக் கழகம்

ஆரியங்காவூர்

உபதலைவர்கள்: ஆர். அரிராமவாசகம்
ஆர் காளிமுத்து
செயலாளர்: எஸ். ஆரியங்காவு
பொக்கிஷதார்: ஆர். சுப்பையா.
உதவி பொக்கிஷதார்: ஆர். ராமசாமி.

எட்டுப் பேர் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. 'கண்ணன் படிப்பக'மும் 'கலை' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேட்டுப்பாளையம்

உபதலைவர்: து. பாலகிருஷ்ணன்
செயலாளர்: கு. ராதாகிருஷ்ணன்
பொருளாளர்: க. ரங்கராஜன்.

பத்துப்பேர் கொண்ட செயற்குழு ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது ஒரு வாசகசாலையும், 'பிறை மதி' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் துவக்கப்பட்டுள்ளன. இதன் தீபாவளி மலரில் வெளியாகும் இரண்டு சிறந்த கதைகளுக்குப் பரிசுகள் உண்டு. நண்பர்கள் 10-10-54 தேதிக்குள், து. பாலகிருஷ்ணன், 1/69, காரமடை ரஸ்தா, பங்களாமேடு என்ற விலாசத்திற்குக் கதைகள் அனுப்பலாம்.

திருத்தங்கல்

உபதலைவர்: ரா சு. பழனிசாமி
செயலாளர்: எஸ் வரதராஜன்
துணைச் செயலாளர்கள்: எஸ். வள்ளி
நாயகம்., பி. அருஞ்சுனை
பொருளாளர்: ஏ. நெல்லையப்பன்

பதினைந்து பேர் கொண்ட செயற்குழு ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது. 'சிறுவன்' என்ற கையெழுத்துப் பததிரிகை நடத்தப் படுகிறது.

துறையூர்

உபதலைவர்: டி. பி. சுப்பிரமணியன்
செயலாளர்: எம். முருகேசன்
பொருளாளர்கள்: டி. பி. நாகராஜன்,
எம். ரகுநாதன்

ஆறு பேர் கொண்ட செயற்குழு ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது. 'மணி' என்ற கையெழுத்துப் பத்திரிகை நடத்தப் படுகிறது.

பேனா நண்பர்கள்

1. R. அரிராமவாசகம், ஆரியங்காவூர், திப்பணம்பட்டி போஸ்டு, தென்காசி தாலுக்கா.
2. D. பாலகிருஷ்ணன், 1/69 காரமடை ரஸ்தா, பங்களா மேடு, மேட்டுப்பாளையம். (கோவை.)
3. R S. பழனிசாமி, விருதுநகர்ரோடு, திருத்தங்கல் போஸ்டு, சிவகாசி வழி.
4. T. P. சுப்பிரமணியன் c/o M. M. பெருமாள் செட்டியார், துறையூர், திருச்சி ஜில்லா.
5. V. விசுவநாதன் c/o T. C. வெங்கடசுப்பிரமணியன், M. A., B. L., A. P. P., உதகமண்டலம்.
6. G. லக்ஷ்மணன், 242. ஒனன் ரோட், சிங்கபூர்-15.

அற்புதமாகத் தயாராகிறது!

கண்ணன்

தீபாவளி மலர்

- ★ கண்ணுக்கு இனிய மலர் - கருத்துக்கு இசைந்த மலர்! - -
- ★ அழகான மூவர்ண அட்டைப் படம்!
- ★ ஏராளமான புகைப்படப் பகுதிகள்
- ★ அறிஞர்களும் அபிமானிகளும் எழுதும் கதைகள், கவிதைகள் -
- ★ வெட்டி ஓட்டும் மூவர்ணப் படம்!
- ★ பக்கத்துக்குப் பக்கம் படங்கள் பரவசமூட்டும் விசேஷப் பகுதிகள்.

விலை 1 ரூபாய்

கண்ணன் ஏஜெண்டிடம் உங்கள் பிரதிக்கு இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.